விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 07 புதன்கிழமை (21.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# நினைவேந்தலை கைவிடாவிட்டால் இராணுவம் தலையிட நேரிடும்!

## யாழ்.தளபதி திட்டவட்டம்!

(கொழும்பு)

*இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் அதைக் கொண்டாடுவதால் தேவையற்ற பிரச்சினைகள் வரும். எனவே அந்த நிகழ்வைக் கைவிடுங்கள். இல்லாவிட்டால் இராணுவம் தலையிடும் என யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி உதய பெரேரா தெரிவித்துள்ளார்.*

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை நேற்று செவ்வாய்க்கிழமை படைத்தலைமையகத்துக்கு அழைத்த யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஆசிரியர் சங்கத்தினர், நாம் யுத்தத்தில் இறந்து போன மக்களுக்கே அஞ்சலி செலுத்தக் கோரினோம். அது எமது கடமை. தமிழ்ப் பாரம்பரியம். அதை அனுஷ்டிப்பதற்கு எமக்கு உரிமை இருக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த இராணு



வத்தளபதி, உங்களுக்கு உரிமை

20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாண சபையில் நாளை முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் அடுத்த அமர்வின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமிழர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் 9 ஆவது அமர்வு நாளை 22 ஆம் திகதி காலை 9 மணியளவில் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போதே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவேந்தல் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் நடத்த ஆளும்கட்சி உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

இருப்பினும் பொலிஸார் குவிக்கப்பட்டு மாகாண சபை உறுப்பினர்கள் உட்செல்ல முடியாமல் தடுக்கப்பட்டதோடு நினைவேந்தல் நிகழ்வும் தடுக்கப்பட்டது.

இதேவேளை பொலிஸாரின்

20ஆம் பக்கம் பார்க்க....

## வாள் வெட்டில் மீண்டும் ஆவா குழு?

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவை சேர்ந்தவர்களே தம் மீது தாக்குதலை மேற்கொண்டதாக வாள்வெட்டில் காயமடைந்த இளைஞன் பொலிஸாரிடம் வாய்மூல முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யாழில் நடைபெற்ற கொலை, கொள்ளை, வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழு என்னும் குழுவை சேர்ந்த 13 பேரினை கடந்த 2-ம் மாதம் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி இருந்தனர். அவர்கள் அனைவரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தற்போது பிணை

20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா தீர்மானம் குறித்து கிழக்கில் விளக்கக் கூட்டம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேறியுள்ள தீர்மானங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கவும், அது தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்குமான கூட்டங்கள் கிழக்கில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

எதிர்வரும் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிலும், 31-ம் திகதி சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திலும், அக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்த முக்கிய கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஐ.நா. மனித உரிமைப் பேரவை தீர்மானங்கள் தொடர்பில் விசேட உரையாற்றவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைக்கு எதிராக நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை எவ்வாறு

19ஆம் பக்கம் பார்க்க....

## "இவ்வுலகிலிருந்து விடுதலை நிச்சயம்"

### பல்கலைக்கழகத்தில் மீண்டும் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

"உங்களிற்கு இவ்வுலகிலிருந்து விடுதலை நிச்சயம்" என யாழ்.பல்கலைககழகத்தில் அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரம் மீண்டும் ஒட்டப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரத்தில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர், விரிவுரையாளர், மாணவர் ஒன்றியத்தினர், இரு பத்திரிகையாளர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டு, இவர்களிற்கு இனி மரண தண்டனையே எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதி எச்சரிக்கை என தலையங்கம் இடப்பட்டுள்ள அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில்பயங்கரவாதத்தை வளர்க்க முற்படுவோர் தண்டிக்கப்படவுள்ளனர்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அப்பயங்கரவாதத்தை யாழ்ப்பாணம் பல்கலைக்கழ

19ஆம் பக்கம் பார்க்க....

## ஒன்றரைக் கோடி ரூபா மோசடி யாழில் தாயும் மகளும் கைது!

### 7 குடும்பங்களை ஏமாற்றினராம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 07 குடும்பங்களை ஏமாற்றி அக்குடும்பங்களிடமிருந்து ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாயை மோசடி செய்ததாக கூறப்படும் இருவரை நேற்று செவ்வாய்க்கிழமை கைதுசெய்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இடைத்தரகராகச் செயற்பட்ட குடும்பம் ஒன்றின் 02 உறுப்பினர்களே யாழ்.கஸ்தூரியார் வீதி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகிலுள்ள வீட்டில் வைத்து கைது செய்துள்ளதாகவும் யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் பிரதான சந்தேக நபரான எஸ்.எம்.ஜே.சுரைஸ் என்பவரை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.புலோலி புளியங்கியான் இந்து மயானத்திற்கு அருகிலிருந்து கை, கால்கள் கட்டப்பட்டு மயங்கிய நிலையில் பெண்ணொருவர இம்மாதம் 07ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு மீட்கப்பட்ட பெண் வெளிநாட்டிற்குச் செல்வதற்காக பெருந்தொகையான பணத்தை கொடுத்துள்ளார். தான் கொடுத்த பணத்தினைத் திருப்பி தருமாறும்

19ஆம் பக்கம் பார்க்க....

## குற்றத்தடுப்பு பிரிவினரால் இராஜகுமாரனுக்கு அழைப்பு

### இன்று கொழும்பில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அமிர்தலிங்கம் இராஜகுமாரன் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்றையதினம் முள்ளிவாய்க்கால் தினம் அனுஷ்டிக்கப்பட இருந்த நிலையில் அவர் இன்று காலை கொழும்பு ரி.ஐ.டி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை தொலைபேசி மூலம் ஆசிரியர் சங்கத் தலைவர் இராஜ்குமாரனை தொடர்பு கொண்ட கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் நாளை (இன்று) காலை கொழும்பு ரி.ஐ.டி பணிமனையில் சமுகமளிக்க வேண்டும்

19ஆம் பக்கம் பார்க்க....

## பதவியேற்கிறார் மோடி 26-ம் திகதி

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக, பாஜகவின் நரேந்திர மோடி வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பதவி ஏற்பார் என அக்கட்சியின் தலைவர ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்டதுபோல நரேந்திர மோடியை தமது நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் பிரதமர் பதவிக்குரியவராகவும் பாஜக தேர்ந்தெடுத்திருந்தது.

குஜராத் முதலமைச்சரான நரேந்திர மோடி தற்போது இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்

19ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு ஆதரவு வழங்க பாகிஸ்தான் தயாராகவே உள்ளது

### சீனாவில் வைத்து உறுதியளிப்பு



(ஷங்காய்)

இலங்கைக்கு பாகிஸ்தான் எப்போதும் ஆதரவை வழங்குமென பாகிஸ்தான் ஜனாதிபதி மஹ்மூன் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஷங்காயில் நேற்று இடம்பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் உங்களோடு இருக்கும். நாங்களும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தோம். பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்ஷா அல்லாஹ் இந்த பிரச்சினையை முற்றாக ஒழித்துக் கட்டு

19ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நபர்கள் இணைந்து இருவரை கலைத்துக் கலைத்து வெட்டினர்

## பூநாறிமரத்தடியில் கொடூரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பூநாறி மரத்தடியில் இரு இளைஞர்கள் மீது வாள் மற்றும் கை கோடரியினால் இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் உள்ள பூநாறி மர பிரதேசத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கொக்குவில் பிரதேசத்தை சேர்ந்த திலீப் (வயது 26), செந்தீஷன் (வயது 24) ஆகிய இரு இளைஞர்களே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

கொக்குவில் மஞ்சவன பகுதியில் இருந்து 6 மோட்டார் சைக்கிளில் வந்த 10 நபர்கள் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இருவரையும் தாக்க முற்பட்டுள்ளனர்.

அத்தாக்குதலில் இருந்து தப்பி காங்கேசன்துறை வீதியின் ஊடாக முச்சக்கர வண்டியில் ஓடியவர்களை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு கலைத்து வந்து பூநாறி மரத்தடியில் மீண்டும் இடைமறித்து முச்சக்கர வண்டியில் இருந்தவர்கள் மீது வாள் மற்றும் கைக்கோடரிகளால் சரமாரியாக வெட்டியுள்ளார்கள்.

இத்தாக்குதலை மேற்கொண்ட குழுவில் மூவர் கைகோடரிகளை வைத்திருந்ததாகவும் ஒருவர் வாள் வைத்திருந்ததாகவும் இச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)


## உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள், காட்போட் மற்றும் பிளாஸ்ரிக் வகைகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக்கொள்ளுகின்றோம்.

தொடர்புகளுக்கு:

**077 078 9476**

(6429)


## வடக்கு – கிழக்கில் புலனாய்வு அதிகரிப்பு?

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புலனாய்வு அதிகாரிகளின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்டிருந்த நிலையில், அவர்கள் இன்னும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கையை இழக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இரகசியமான முறையில் விடுதலைப் புலிகளுக்கு வடக்கு கிழக்கில் உயிரூட்டப்படலாம் என்று நிலை காணப்படுவதாக அரசாங்கம் அஞ்சுகிறது.

இந்த நிலையில் அங்கு புலனாய்வாளர்களை அதிகரித்து, பொது மக்களை கண்காணிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு


021 321 0815

021 567 1532


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர் – சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)



மந்துவில் மேற்கு மந்துவிலை பிறப்பிடமாகவும் ஐயா கடை சந்தி, சாவகச்சேரி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் அவர்கள் 20. 05. 2014 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் இந்துமதி (ஓய்வுபெற்ற கணக்காளர்-இலங்கை போக்குவரத்துச் சபை கோண்டாவில்) அவர்களின் அன்புக் கணவரும், விஜிதா, கோபிகிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயா கடை சந்தி,**
**சாவகச்சேரி வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சீ-7434)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## இலட்சுமிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியரான திருமதி புவனேஸ்வரி சிவசெந்திநாதன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் இலட்சுமிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/வடமராட்சி**
**இந்து மகளிர் கல்லூரி,**
**பருத்தித்துறை.** (C-7432)

**அதிபர், ஆசிரியர்,**
**மாணவர்கள்,**
**கல்விசாரா ஊழியர்கள்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மருத்துவ பீடத்திற்கு மனித உடல்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ உடற்கூற்றியற் துறையில் மருத்துவ மாணவர்களின் திறன்மிகு கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் பொருட்டு தேவையான மனித உடல்களை சமூகப் பற்றாளர்களிடமிருந்து பெற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் கோரி நிற்கின்றது.

இவ்வகையில் தாம் இறந்த பின்னர் தமது புகழுடம்பைத் தானம் செய்யும் உயர்ந்த நற்பணியில் ஈடுபட விரும்புவோர் மருத்துவபீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 021-222 2073, 077-947 4857**

**தானம் செய்ய விரும்புவோர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:**

1. தானம் செய்ய விரும்புவோர் மருத்துவபீடக் காரியாலயத்தில் இருக்கும் உரிய படிவத்தை நிரப்பி ஒப்படைக்க வேண்டும்.
2. இறந்தபின் உறவினர் உடற்கூற்றியல்துறை தலைவர் அல்லது தொழில்நுட்பவியலாளருக்கு 10 மணித்தியாலத்துக்குள் அறிவித்தல் வேண்டும்.
3. யாழ்.மாவட்டத்திற்குள் போக்குவரத்து வசதிகள் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்படும்.
4. உடலை ஒப்படைக்கும்போது மரணச் சான்றிதழும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

**பதிவாளர்** (சீ-7426)

## University of Jaffna

**Professor Sivapathasuntharam Mageswaran Memorial Lecture**

**Synthesis and non - covalent Electron Transfer Studies of some Novel Organic Compounds**

| | |
|---|---|
| Speaker | Dr.Sathiosatham Muhunthan<br>Senior Scientist, Performance Monomers R&D<br>The Dow Chemical Company, USA |
| Venue | Kailasapathy Auditorium<br>University of Jaffna. |
| Date | 22.05.2014 |
| Time | 2.30 pm |

**All are cordially invited**

Registrar (C-7427)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க காத்திரமான நடவடிக்கை எடுங்கள்

## மோடியிடம் கூட்டமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாரதப்பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர தாமோதர மோடியின் தலைமையிலான புதிய அரசாங்கத்திடமிருந்து நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை உத்தரவாதப்படுத்தக்கூடிய கொள்கைகளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மோடிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாரதப்பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்களது கட்சியான பாரதீய ஜனதா கட்சி தனிப்பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சி அமைக்கும் வெற்றியீட்டியுள்ளமையையிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியா மற்றும் இலங்கைத் தமிழர்களிடையில் மொழி, மதம் மற்றும் கலாசார உறவுகள் பின்னிப்பிணைந்துள்ளன.

தங்களது சீரிய தலைமையின் கீழ் எமது சகோதரத்துவ உறவுகள் மேலும் வலுப்பெற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

தங்களது புதிய அரசாங்கத்திடமிருந்து நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை உத்தரவாதப்படுத்தக்கூடிய கொள்கைகளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

யுத்தம் முடிவுற்றவுடன் இயல்பாகத் திரும்பியிருக்க வேண்டிய அமைதிக்குப் பதிலாக, இலங்கைத் தமிழர்களின் இருப்பே நாளுக்கு நாள் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது.

அவர்களது வாழ்வு மிகவும் ஆபத்தானதாக மாறிவருகின்றது. இலங்கை அரசு தனது முழு அதிகாரத்தையும் ஆயுதப்படைகளையும பயன்படுத்தி தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதுடன் அவர்களது வாழ்வாதாரத்தையும் பறித்தெடுக்கின்றது.

இலங்கை அரசு தமிழர்களுக்கெதிராக நன்கு திட்டமிட்ட வகையில் மூர்க்கத்தனமான வன்முறைகளை அமுல்படுத்துகின்றது. அவர்களின் நாளாந்த வாழ்வும் பாதுகாப்பும் அனைத்து வகைகளிலும் அச்சத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் விடியல்குறித்து முழுமையாகவும் அக்கறையுடனும் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆகவே, மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு வசதியாக கூடிய விரைவில் தங்களின் பொன்னான நேரத்தின் ஒருபகுதியை எமக்காகவும் ஒதுக்கி எமது வேண்டுகோள்களைச் செவிமடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, கூட்டமைப்பினரால் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்தக்கடிதத்தில்,

தங்களது சீரிய தலைமையின் கீழ் நடந்து முடிந்த இந்திய பாராளுமன்றத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் 37 ஆசனங்களைப் பெற்று வரலாற்றுச் சிறப்புமிக்க இமாலய வெற்றியீட்டியுள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும் நோக்கில் தங்களால் தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் தமிழக மக்கள் தங்கள் ஆதரவை உங்களுக்கு வழங்கியமைக்காக இலங்கை வாழ தமிழ் மக்களின் சார்பாக தமிழக மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழக மக்களின் இந்த அளப்பரிய ஆணையானது அத்தகைய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான வலிமையை வழங்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்களின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைகள் பற்றியும் விபரிக்கப பட்டுள்ளன.

அத்துடன் தமிழகமுதல்வருடன கலந்துரையாடுவதற்கும் நேரம் ஒதுக்குமாறும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (அ-6)



மன்னார்-யாழ்ப்பாண இலக்கிய படைப்பாளிகள்,கலைஞர் இடையேயான ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் அண்மையில் திருமறைக் கலாமன்றத்தில் எழுத்தாளர் சட்டநாதன் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களது வில்லுப்பாட்டு நிகழ்வைப் படத்தில் காணலாம்.
(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவது சிறுவர் துஷ்பிரயோகமாகும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருவது தடுத்து நிறுத்தப்பட்டு அவர்கள் மீண்டும் தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அதேவேளை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன்படி தனியார் கல்வி நிறுவனங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புக்கள் நடத்த தடையை அமுல்படுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக காலை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழில்களில் ஈடுபடும் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை மீண்டும பாடசாலைகளில் இணைத்து அவர்களுக்கும் கல்விச செயற்பாட்டை வழங்க வேண்டும்.

சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்தச் செய்வதும் சிறுவர் துஷ்பிரயோகமே .

மேலும், தனியார் கல்வி நிறுவனங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புக்கள் நடத்த ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டது. ஆனால் இந்த நடைமுறை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் தற்போது அதிகளவில் இடம்பெற்று வருவதனை அறியமுடிகின்றது. பாடசாலைகளிலும், தனியார் வகுப்புக்களிலும் கல்வி கற்றுவரும் மாணவர்கள் ஒருசிலர் போதைவஸ்து பாவனையிலும் இடம் பெற்று வருவதனை உடனடியாக தடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



இந்தக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர் அபிவிருத்தி தொடர்பான அதிகாரிகள் பங்குகொண்டிருந்தனர். (2-6)

# இராசி பலன்

**21.05.2014**
**(வைகாசி 07, புதன்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**சப்தமி முற்பகல் 10.46 மணிவரை**
**அவிட்டம் முன்னிரவு 9.55 மணிவரை**
**இராகுகாலம் 11.52-01.22 மணிவரை**
**சுபநேரம் 4.22-5.52 மணிவரை**

**வளவன்**

**மேடம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்கள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், செல்வாக்கு அதிகரிக்கும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்:** உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் உருவாகும், ஆன்றோர் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** செய்யும் தொழிலில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை.

**சிம்மம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், திடீர் பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்,

**கன்னி:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**துலாம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வளர்ச்சி கூடும் நாள், போக விரும்பும் இடத்திற்கு செல்வதில் சில இடையூறுகள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, தேவையற்ற சஞ்சலங்கள் உருவாகலாம், சந்தித்த [illegible] சந்தோசமான தகவலொன்று வந்து சேரலாம்.

**தனுசு:** நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**கும்பம்:** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணி நேரம் காத்திருக்க வேண்டி வரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்பட்டறையில் கலந்து கொள்ளலாம்


(யாழ்ப்பாணம்)

வட புல மாணவர்களின் கவிதை புனையும் ஆற்றலையும் சிந்தனை ஆற்றலையும் வளம்படுத்தும் நோக் கில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறையினருடன் இணைந்து கவிதைப் பட்டறையொன்றை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நடத்தவுள்ளனர்.




யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தில் நடைபெறும் இக் கவிதைப் பட்டறையில் ஆர்வமுள்ள மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வட புலத்தின் ஆற்றல் மிக்க தடம் பதித்த கவிஞர்கள், பேராசி ரியர்கள் போதிக்கும் இப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பெறுமதி மிக்க சான்றிதழும் வழங்கப்படும். இக் கவிதைப் பட்டறையில் கலந்து கொள்ள விரும்புவோர் 0778449739 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் இதழாசிரியர் இ.சர்வேஸ்வராவை தொடர்பு கொண்டு முற்பதிவுகளை அவசியம் மேற்கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (அ)




# குடமியன் வீதியை புனரமைத்து தருக

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட குடமியன் கட்ட யாப்பு வீதியை புனரமைத்து தருமாறு அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த வீதியானது சுமார் 30 வருடங்களாக திருத்தப்படாது மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதியூடாக குடமியன், நாவற்காடு, மிருசுவில் வடக்கு கிராம மக்கள் தமது விவசாய உற்பத்தி பொருட்களை கொடிகாமம் சந்தைக்கு எடுத்து செல்வதுடன் மாணவர்களும் தினமும் இவ்வீதியினால் சென்று வருகின்றனர்.

எனவே மழை காலத்திற்கு முன்னர் இவ் வீதியை புனரமைத்து சீரான போக்குவரத்துக்கு உதவுமாறு அப் பிரதேச மக்கள் வீதி அதிகார சபைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-29)

# நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழு 2014 ஆம் ஆண்டுக்கான 22 ஆவது மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுவதாக சைவ சமய விவகாரக் குழு தலைவரும் மாந கர சபை ஆணையாளருமான செ. பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கட்டுரைகள் 5 தொடக்கம் 7 வரையான பக்கங்க ளுக்குள் அமைதல் வேண்டும். அத்துடன் ஏற்கனவே மலரில் வெளிவந்த கட்டுரைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்பும்போது இடதுபக்க மேல்மூலையில் நல்லைக் குமரன் மலர் 22 எனக் குறிப்பிட்டு பிரதம பதிப்பாசிரியர், நல்லைக் குமரன் மலர் 22, இல.21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். எனும் முக வரி க்கு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்பு வோர் nallaivijayan@yahoo.com என்ற மின் னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அத்துடன் கட்டுரைகளை இறு வட்டுக்க ளில் அனுப்புவது சிறந்த தாகுமென யாழ். மாநகர சபை சைவசமயவிவகாரக்குழுவினால் அறிவிக் கப்பட்டுள்ளது. (2)

## விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு க்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ள தாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக இருபது ரூபாவரியும் செலுத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை ஆடியபாதம் வீதியிலுள்ள முன்பள்ளி அருகாமையிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கல்வியங்காடு சந்தையிலும்வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அவர் மேலும் அறிவித்துள்ளார். (2)

## மணவாளக்கோலவிழா

(கரணவாய்)

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோல விழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் பொலிகண்டி இருப்பை மூலை சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆனந்த காவடி, பாற்செம்பு எடுக்கும் நிகழ்வுடன் விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும்.

பின்னர் இரவு 7 மணிக்கு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதி யுலா வரும் அருட்காட்சியும் இடம் பெறவுள்ளது. (2-60)

# ஆலயங்களில் உயிர் பலியிடுதல் சமயநெறிக்கு முரணான செயல்

## சைவமகா சபை வருத்தம்

யாழ். பண்டத்தரிப்பு, பிரான்பற்று ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற உயிர் பலியிடுதல் சம்பவம் தமது சமயநெறிக்கு முரணான, வருந்தத்தக்க செயலாகும் என சைவ மகாசபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள் சிலவற்றில் இடம்பெறும் வேள்வி தொடர்பில் சைவ மகா சபையால் "உயிர் பலியை நிறுத்துவோம், **ஜீவகாருண்யம் காப்போம்**" என்னும் தலைப்பில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டில் வலிகாமம் பகுதியில் மட்டும் இன்று மிகச் சில ஆலயங்களில் நடைபெற்று வரும் இச்செயல் முழு ஜீவகாருண்யத்தை நேசிக்கின்ற சைவர்களையும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. மேற்படி ஆலயத்தை தொடர்ந்து கடந்த வருடம் முதல் பலியிடுதலை நிறுத்துகின்றோம் என உறுதியளித்த சில ஆலயங்களும் பலியிடுதலை மேற்கொள்ள தயாராகி வருகின்றமையும் அதற்கு சில பிரதேச சபைகள் உறுதுணை புரிய முயற்சிக்கின்றமையும் மேலும் வேதனை தருவதாகவுள்ளது.

இந்தக் கொடிய வழக்கம் கைவிடப்படவேண்டும் என்பதில் இலங்கையில் சைவ சமயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆதீனங்கள், குருமார்கள், சமய அமைப்புக்கள் எவற்றிற்கும் மாறுபட்ட கருத்துக் கிடையாது என்பதையும் இதனை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரம் உடைய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடந்த காலங்களில் பல தடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்டமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆதலினால் வருகின்ற வாரங்களில் மிகப்பெருமளவில் பலியெடுப்புடன் இன்னும் சில ஆலயங்களில் நடைபெற இருக்கின்ற உயிர்ப்பலியை தடுத்து நிறுத்துமாறு முதலமைச்சரும் இவற்றுடன் தொடர்பான பிரதேச சபைகளின் உள்ளூராட்சி சட்ட அமுலாக்கல் செய்கின்ற உள்ளூராட்சி அமைச்சரும் ஆன்மீக பெரியவருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை சைவப்பெருமக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

அதேநேரம், உண்மையான இறைபக்தியையுடைய பலியிடுதலை தவறாக புரிந்து வைத்திருக்கின்ற கிராமிய அன்பர்களிடம் நாம் வேண்டுவதென்னவெனில், இன்னொரு உயிரை எமக்காக எனக் கூறி எல்லா உயிர்களுக்கும் பொதுவான இறைவன் சந்நிதியில் பலியிடுதலை தவிர்த்து உண்மையான கிராமிய வழிபாடான இன்றும் வற்றாப்பளை அம்மன், புளியம்பொக்கணை, புத்தூர் நாகதம்பிரான் போன்ற அருள் நிறைந்த கிராமிய ஆலயங்களில் நடைபெறுவது போல பொங்கல் பொங்கி, மடைபரப்பி, ஆடிப்பாடி இறைவனுக்கு படைத்து நாமும் உண்டு ஏனைய ஜீவராசிகளுக்கும் உணவளிக்கும் முறைமையாக எமது வேள்வியை மாற்றிக் கொள்வோம்.

அப்போதுதான் இறைவன் எம் வழிபாட்டை அகமகிழ்ந்து ஏற்று, எமக்கும் எமது எதிர்கால சந்ததிக்கும் தன் தெய்வீக அருளை அள்ளி வழங்குவான்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-23)

# வணிகர் கழகத்தினால் வாழ்வாதார உதவிகள்

## நேற்று வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர்கழகம் இவ்வாண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக வணிகர் சங்க தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.



வணிகர் கழகத்தில் நேற்று இடம்பெற்ற வாழ் வாதார உதவி வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

கடந்த வருடம் எமது திட்டத்தின் மூலம் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தோம்.

இவ்வாறு பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய இரண்டாயிரம் மாணவர்களை பாடசாலைகளில் மீண்டும் இணைவதற்கான வழிகளை செய்து கொடுத்துள்ளோம்.

இவ்வருட திட்டத்தின் மூலம் வாழ்வாதார கொடுப்பனவாக பசு மாடுகள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிக எறியம் நூல் வெளியீட்டு விழா

(சித்தங்கேணி)

யா/வட்டு இந்துக் கல்லூரி வணிக மன்றத்தினரின் வணிக எறியம் எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் வள்ளியம்மை மண்டபத்தில் வணிக மன்றத்தலைவர் இ.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.ம.சரவணபவஐயர், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறை சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி. ஜெயானந்தகுமாரி சரவணபவ ஐயர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஏ.எஸ்.மரியாம்பிள்ளை, வலிகாமம் கல்வி வலய வணிகக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.துரைராசசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2-17)

# நமது கட்சி அரசாங்கத்துடன் இணையாமல் இருந்திருக்கலாம்

## நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

இன்றுள்ள நிலைமையை பார்க்கும் போது அரசாங்கத்தோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சேராமலேயே இருந்திருக்கலாமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

காத்தான்குடியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி மத்திய குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டது. கட்சி பாதுகாக்கப்பட வேண்டுமாகவிருந்தால், அரசாங்கத்துடன் இணையவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

அரசாங்கத்துடன் இணைந்து மூன்றரை வருடங்களாகின்றன. ஆனால், இன்றுள்ள நிலைமைகளை பார்க்கின்றபோது அரசாங்கத்தோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சேராமலேயே இருந்திருக்கலாமென்று எண்ணத்தோன்றுகின்றது.

இதய பூர்வமாக கட்சி ஆதரவாளர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடத்த வேண்டியுள்ளது. ஆதரவாளர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற வேண்டியுள்ளது. கட்சியின் அமைப்பு வேலைகளையும் பலப்படுத்த வேண்டியுள்ளது.

அடுத்த வருடம் தேசிய மட்டத்தில் தேர்தலொன்று நடைபெறக்கூடிய சூழ்நிலையுள்ளது. அது ஜனாதிபதித் தேர்தலாகவோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலாகவோ இருக்கலாம். இன்று வரை ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவே கூறப்படுகின்றது. எனினும், இனிவரும் மாற்றங்களைப் பொறுத்து முடிவுகள் மாறக்கூடிய நிலையுமுள்ளது என்றார். (2)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### சிவ.ஆறுமுகசாமி நந்தினி (B.A)

27.04.2014 ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்ற திரு. திருமதி சிவ.ஆறுமுகசாமி (J.P) ஜெகதா தம்பதியினரின் புத்திரி நந்தினி (B.A) அவர்களை மனதார பாராட்டி நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் கிழக்கு
கொக்குவில்

வாழ்த்துபவர்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்

(6413)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 41.5 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc, MSc / Associate Engineer
தொ.இ: B/3159

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 20
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: Accounts & Finance BA / கணக்காளர்
தொ.இ: B/3160

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 48 சூரி செவ் 11 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L / Computer Programmer (சுவிஸ் PR)
தொ.இ: B/3161

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 39 செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: B/3163

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
கி.பா: 10
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L / தையல்
தொ.இ: G/3168

பிறப்பு: 1976 இந்து
உயரம்: 5'6"
தகைமை/தொழில் O/L / தையல்
எதிர்பார்ப்பு: பெண் கணவனை இழந்தவர்
தொ.இ: G/3169

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 14 சூரி செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, NCICT
தொ.இ: G/3170

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 18.5
உயரம்: 5'
தகைமை/தொழில் A/L/ எழுதுவினைஞர்
எதிர்பார்ப்பு: பெண் கணவனை இழந்தவர்
தொ.இ: G/3173

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்
1965.02.06

மறைவு
2014.04.21

### வைத்திலிங்கம் முருகதாசன்

கடந்த 21.04.2014 இறைபதம் எய்திய அமரர் வைத்திலிங்கம் முருகதாசன் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்து அவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 23.05.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பங்களாலேன்,
மல்லாகம்.

குடும்பத்தினர்

(6425)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசனைகளை அரசு ஏற்காவிடில் ஆளும் கட்சியிலிருந்து விலகுவேன்

## அமைச்சர் விமல் எச்சரிக்கை

தமது கட்சியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தவறினால், ஆளும் கட்சியிலிருந்து விலகத் தயார் என வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளார்.

கர்தினால் மெல்கம் ரஞ்சித்தை சந்தித்தன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அமைச்சர் விமல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அண்மையில் ஜே.என்.பி. பொதுசபைக் கூட்டத்தில் 12 அம்ச திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும், அந்த யோசனைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைத் திட்டங்களை கண்டி மல்வத்து அஸ்கிரி பீடாதிபதிகளிடமும் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதியை சந்தித்து இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும், அந்த சந்திப்பின் பின்னர், கட்சியின் தீர்மானம் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எமது கட்சியின் இரண்டாவது மாநாட்டில் அரசிற்கு ஆலோசனை விடுக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட 12 தீர்மானங்களை கர்தினாலிடம் முன்வைத்த போது அதற்கு அவர் ஆசீர்வதித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடனேயே இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிலையில் குறித்த தீர்மானங்களை ஏனைய மதத் தலைவர்களுக்கும் முன்வைக்கவுள்ளோம். அதேபோன்று இத்தீர்மானங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்க திட்டமிட்டுள்ளோம்.

குறித்த தீர்மானங்களை நிறைவேற்ற அரசாங்கம் மறுக்கும் பட்சத்தில் எமது கட்சி சுயாதீனமாக செயற்படும். அதாவது அரசாங்கத்திலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும் என்றார்.

இதேவேளை, உங்களது செயற்பாடுகள் வெறும் நாடகமென்று எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிய போது எதிர்க்கட்சி கூற்றுப்படி இது நாடகமா அல்லது உண்மையா என்பது விரைவில் தெரிய வரும் என்றும் அவர் கூறினார். (2)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நிர்மாணிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை சிலையை திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் மானிப்பாய் செய்தியாளர்)



## தங்கம் கடத்த முயன்ற மூவர் கைதாகினர்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவின் மும்பை நோக்கி செல்ல தயாராகவிருந்த நிலையில் மூவரும் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

சுமார் 12 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம் கடத்திச் செல்ல முயன்றவேளை குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இ ண்டு கிலோ 400 கிராம் நிறையுடைய 24 தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம் பெறுவதாக அவர் குறிப்பிட்டார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 160 |
| தக்காளி | 130 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 70 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| க்ருணைக் கிழங்கு | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 20-30 | 50 | 50 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 80 |
| கறிமிளகாய் | 70 | 70 | 120 |
| முருங்கைக்காய் | 70-100 | 120 | 60 |
| போஞ்சி | - | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 |
| தேசிக்காய் | 110-140 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-45 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 100 | 80 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 20

### குமார் கார்த்திகன்




### ஜங்கரன் சிவசாந்தன்




### மது மதுவந்தி




### அசோக் குழந்தைவேலு




### ரவிக்குமார் ரவி




### தீபன் சற்குணம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri .16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச பேருந்து சேவையை ஏற்படுத்துமாறு கோரிக்கை

(முல்லாவி)

முல்லை.கல்வி வலயத்தின் கீழுள்ள பாடாலைகளில் கடமையாற்றும் யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் தமக்கு இலவச பேருந்து சேவையை ஏற்படுத்தி தருமாறு கோரி மகஜர் ஒன்றினை வடமாகாண கல்வி அமைச்சர், வடமாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமைாற்றும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான இலவச பேருந்து சேவை கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் முல்லை.கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற நாம் உரிய நேரத்திற்கு பேருந்து சேவையைப் பெற்றுக்கொள்வதிலும் சிக்கல் நிலவுகின்றது.

அத்தோடு போக்குவரத்தில் பின்தங்கிய கிராமங்களிலிருந்து போக்குவரத்து சேவையைப் பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றோம்.

அத்தோடு பாடசாலைகளில் விடுதி வசதிகளின்றி அன்றாடம் பணிக்குச் செல்பவர்களும் இடையூறுகளை சந்திக்க வேண்டியுள்ளது.

எமது நிலையை கருத்திற் கொண்டு இலவச பேருந்து சேவையை ஏற்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-15)

# பெண் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் கையளிப்பு

(குருமன்காடு)

வலுவிழப்புடன்கூடிய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மகஜரொன்று வடமாகாண சுகாதார அமைச்சரிடம நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (ஒகான்) அனுசரணையுடன் முல்லைத்தீவில் நடைபெற்ற பெண்கள மாநாட்டின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானமே இவ்வாறு மகஜராக கையளிக்கப்பட்டுள்ளது.

"வீடு பெண்களுக்கு கூண்டல்ல" எனும் கருப்பொருளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற முழுநாள் பட்டறையில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் வலுவிழப்புடன்கூடிய தலா பத்து பெண்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட 75 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் முடிவில் பாதிக்கப்பட்டவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய தீர்மானமொன்று வடமாகாணசபையின் சார்பாக நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த கோரிக்கை மனுவில், வலுவிழப்புடன்கூடிய பெண்களுக்கான வாழ்வாதாரம், சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் போன்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சுகாதார அமைச்சர்,

மூன்று தசாப்த கொடிய யுத்தத்தின் வடுக்களை தாங்கி அதன் வலிகளை சுமந்துகொண்டு வேதனைப்படும் உங்களின் மனநிலை எனக்கு புரிகிறது. குறிப்பாக இறுதியுத்தத்தின்போது அவயவங்களை இழந்து சுயமாக நடமாடமுடியாது சுயகடன்களைச் செய்யக்கூட மற்றவர்களில் தங்கியிருக்கவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள சகோதரிகளே மனம் தளராதீர்கள்.

உங்களால் இன்று கையளிக்கப்பட்ட இந்த கோரிக்கை தீர்மானத்திலுள்ள ஒவ்வொரு வரிகளும் நெஞ்சை உலுக்குவதாகவே உள்ளது. இந்த தீர்மானமானது முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்படும். அத்துடன் வடமாகாண சபையினூடாக எம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள பாடுபடுவோம் என்றார். (9-250)

# 78 வருடங்கள் நிரந்தர கட்டடமின்றி இயங்கும் முள்ளியவளை அஞ்சல் அலுவலகம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் 8 வருடங்களாக நிரந்தர காணி, கட்டடம் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

இவ் அஞ்சல் அலுவலகம் 1936 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உப அஞ்சல் அலவலகமாகவே முள்ளியவளை கிராமிய வைத்திய சாலைக்கு முன்பாக இயங்கி வந்தது. பின்னர் 1980-7-29 ஆம் திகதி முதல் முள்ளியவளை அஞ்சல் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டு முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு அருகிலுள்ள தனியார் வீடொன்றிலேயே இன்று வரை இயங்கி வருகின்றது.

இவ் அஞ்சல் அலுவலகத்தின் கீழ் உபஅஞ்சல் அலுவலகங்கள் எதுவுமின்றி அதிக சனத்தொகை கொண்டு இயங்கி வருகின்றது.

இதன்படி முள்ளியவளை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி, குமுழமுனை கிழக்கு , மேற்கு, மத்தி, தண்ணீரூற்று கிழக்கு, மேற்கு, நீராவிப்பிட்டி கிழக்கு, மேற்கு, கணுக்கேணி கிழக்கு,மேற்கு, குமாரபுரம், தண்ணிமுறிப்பு, மாமூலை, மதவளசிங்கன் குளம், புதறிகுடா, வற்றாப்பளை, கேப்பாபிலவு , ஹிஜ்ராபுரம் ஆகிய 22 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இவ் அஞ்சல் அலுவலகத்தை பயன்படுத்தி வருகின்றனர்.



இவ் 22 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 78 கிராமங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 729 குடும்பங்கள் உள்ளன. அதிக சனத்தொகை மூலம் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் நிரந்தர காணி, கட்டடமின்றி இயங்கி வருவதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முள்ளியவளை-ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக தலா 11 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது.

எனினும் ஒட்டுசுட்டான் அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ள நிலையில் முள்ளியவளை அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தர காணி இல்லை என்ற காரணத்தால் நிதி மீளப்பெறப்பட்டு விட்டது.

தற்போது மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வாடகை செலுத்தி தனியார் வீடொன்றில் இயங்கி வரும் அஞ்சல் அலுவலகத்தில் இடநெருக்கடி, தளபாடங்கள் போதியளவின்மை, விடுதி வசதிகளின்மை, இலத்திரனியல் பொருட்கள் இன்மை, வாகன தரிப்பிட வசதியின்மை, மலசலகூட வசதிகளின்மை, வீதியோர தபால் பெட்டியொன்று சேதமடைந்துள்ளதுடன் போதுமானதாகவும் இல்லை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், முள்ளியவளை பிரதான வீதியிலுள்ள 2 அரச காணிகளில் ஒன்றில் இராணுவத்தினரின் உணவகமும் இயங்கி வருவதுடன் மற்றைய காணியை வனப்பகுதியினர் ஆக்கிரமித்துள்ளனர்.

இவ்விரு காணிகளில் ஒன்றை முள்ளியவளைக்கான நிரந்தர அஞ்சல் அலுவலகம் அமைப்பதற்கு பயன்படுத்த இவ்வருடத்திற்குள் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் நடவடிக்கை எடுப்பாரா? என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (9-267)

## வவுனியா தேசிய இளைஞர் மன்ற இணைப்பாளர் நியமனம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்திற்கு இளைஞர் திட்ட இணைப்பாளராக செல்வி ஜே.ருக்ஸா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு கிடைக்கப்பெற்றுள்ள நியமனக் கடிதத்தில் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கையொப்பமிட்டு ஜூன் மாதம் 2 ஆம திகதியிலிருந்து கடமைகளைப் பொறுப்பேற்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலமாக இந்த நியமனம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இளைஞர் திட்ட இணைப்பாளர் நியமனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இதுவரையும் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (9-250)




# ரவிகரனுக்கு எதிராக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி

(முல்லைத்தீவு)

வடமாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 9 மணியளவில் நீதிமன்ற வளாகத்தின் முன் உறுப்பினர் ரவிகரனின் தலைமையில் காணாமற் போனோரை மையப்படுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் அது நீதிமன்ற அமைதிக்கு பங்கம் விளைவிக்க கூடிய செயலாகையால் அதை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் மேலும் இவ்வாறான தொடர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க ரவிகரன் திட்டமிட்டுள்ளதாகவும் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு தமது வாதங்களும் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் ரவிகரனிடம் வினவப்பட்ட போது,

காணாமற் போனோர் எம்முடைய உறவுகள். அவர்களுக்காக ஆர்ப்பாட்டங்களும் மக்கள் எழுச்சிகளும் நடத்தப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்ட அவர் இன்று (நேற்று) அது தொடர்பில் எதுவித திட்டமும் தான் யாரிடமும் முன் வைக்கவில்லை எனவும் இன்று (நேற்று) ஆர்ப்பாட்டம் என் தலைமையில் நடைபெறவிருக்கிறது என்று பொலிஸாரால் முன்வைக்கப்படிருக்கும் குற்றச்சாட்டானது எதுவித ஆதாரப் பின்னணிகளுமின்றி சோடிக்கப்பட்டதொன்றே எனவும் சாடினார்.

ரவிகரன் சார்பாக வாதிட்ட சட்டத்தரணி பரஞ்சோதியும் இவ்வாறான குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மைத்தன்மையும் இல்லாததால் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டிய நிலையில் பொலிஸாரால் ரவிகரன் மீது போடப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

உறுப்பினர் ரவிகரனை நேற்றுக்காலை நீதிமன்றில் ஆஜராகும் படி நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (26-250)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஆயிரத்து 665 முதியவர்கள்

முல்லைமாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் ஆயிரத்து 665 பேர் உள்ளதாகவும் இவர்களுக்கு சமூக சேவை அமைச்சினாலும் சமூக சேவை திணைக்களத்தினாலும் உதவிகள் ,சேவைகள் என்பன வழங்கப்படுவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் எஸ். குருபரன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 823 ஆண்களும், 842 பெண்களும் அடங்குகின்றனர். இம்முதியவர்களில் மாற்றுத்திறனாளிகளான 14 ஆண்களும், 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் 60-70 வயதிற்கும் இடைப்பட்டவர்களுக்கு சமூக சேவை திணைக்களத்தினால் மாதாந்த உதவிப்பணமாக 250 முதல் 500 ரூபா வரை ஆயிரத்து339 பேருக்கு வழங்கப்படுகின்றது.

அத்தோடு 70 வயதிற்கு மேற்பட்ட 442 பேருக்கு சமூக சேவை அமைச்சின் முதியோருக்கான தேசிய சேவை நிலையத்தின் மூலம் மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவித் தொகையும் ஆயிரத்து 197 முதியோருக்கு முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.


மேலும் இங்குள்ள 26 கிராம சேவகர் பிரிவுகளிலும் முதியோருக்கான அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஆயிரத்து 339 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

முதியோர்களின் தேவையின் அடிப்படையில் ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள் உட்பட பல உதவிகளும் வழங்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (9-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கடலை கடலை



கூத்தும் கும்மாளமும் நிரம்பி வழிந்த அந்தக் காட்டில் இரண்டு நாட்களாக குரங்குகள் வருத்தத்தோடு இருந்தன.

அந்தக் குரங்குக் கூட்டத்தில் படுசுட்டியாகத் திரிந்த மணி, இப்போது இல்லை. பாவம் மணிக் குரங்கு. இப்போது சங்கிலியால் கட்டப்பட்டு, வீட்டுக்கு வீடு சென்று கர்ணம் அடித்துக்கொண்டு இருக்கும்.

அந்தக் காட்டுக்கு அடிக்கடி சில மனிதரகள் வருவார்கள். வாய் குறுகிய சொம்புகளில் கடலைப் பருப்புகளைப் போட்டுத் தரையில் வைத்துவிட்டு, மறைந்து கொள்வார்கள்.


பசியோடு இருக்கும் குரங்குகள் ஓடி வந்து சொம்புக்குள் கையைவிட்டு, கடலைப் பருப்புகளைக் கைநிறைய அள்ளும். அந்த நேரத்தில் மனிதர்கள் தடியோடு ஓடிவருவார்கள். எடுத்த கடலைகளைச் சொம்புக்குள் போட மனம் இல்லாத குரங்குகள், கையில இருக்கும் கடலையோடு கையை வெளியே எடுக்கப் பார்க்கும். வாய் குறுகிய சொம்பில் இருந்து கை வெளியே வராது. ஓடவும் முடியாமல் மரத்தில் ஏறவும் முடியாமல் அந்தக் குரங்குகள் மனிதர்களின் கையில் அகப்பட்டுவிடும்.

இப்படி மனிதர்கள் அவ்வப்போது தங்கள் இனத்தவரைப் பிடித்துப்போவதைப் பார்த்து மற்ற குரங்குகள் தவித்தன. எல்லோருக்கும் செல்லப் பிள்ளையான மணியை, மனிதர்கள் பிடித்துக்கொண்டு போனதிலிருந்து, "இந்தக் கொடுமை தீர ஏதேனும் வழி கண்டு பிடித்தே ஆக வேண்டும்' என்று குரங்குகள் உறுதி எடுத்தன. இரவில் அதற்கான ஆலோசனைக் கூட்டமும் நடைபெறப்போவதாக அறிவிக்கப்பட்டது.

அன்று இரவு, குரங்குகளின் தலைவர் மூக்கன் நடுநாயகமாக ஒரு கல்லின் மீது அமர்ந்து இருந்தது. ஒவ்வொரு குரங்கும் மனிதர்களிடம் பிடிபட்டு அடிமையாக மாறுவதைச் சொல்லி வருத்தம் தெரிவித்தன.

"இப்படியே போனால், மனிதர்கள் நம் இனத்தையே அழித்து வடுவார்கள்" என்று ஒரு குரங்கு சொன்னது.

"நம் பலவீனத்தைப் பயன்படுத்தி நம்மைப் பிடித்து அடிமையாக்குகிறார்கள்" - இது இன்னொரு குரங்கின் ஆதங்கம்.



"மனிதர்களுக்கு நாம் என்ன தீங்கு செய்தோம்? ஏன் இப்படிச் செய்கிறார்கள்?" என வருத்தத்தோடு கேட்டது ஒரு குட்டிக் குரங்கு.

"ஆளாளுக்கு இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் இதற்கு என்னதான் தீர்வு? அதைப் பற்றி யோசிப்போம்!" அந்தக் கூட்டத்தின் துணைத் தலைவர் சற்று உரத்த குரலில் சொன்னது.

"மனிதர்கள் சொம்பில் கடலைகளைப் போட்டு வைக்கிறார்கள். நாம் ஆர்வத்தோடு கடலைகளைக் கையில் எடுக்கிறோம். பிறகு அவர்கள் ஓடிவரும்போது கடலைகளைப் போட்டுவிட நமக்கு மனம் வருவதில்லை. இனி நாம் கடலையே தின்னக் கூடாது என்று வைராக்கியம் எடுத்துக்கொள்வோம்" என்றது ஒரு பெண் குரங்கு.

"ஐயோ... என்னால் அப்படி வைராக்கியம் எடுத்துக்கொள்ள முடியாது" எனப் பதறியது ஒரு தடிக் குரங்கு. "நீ ஒரு தின்னிமாடன். இப்படித்தான் சொல்வாய். உனக்கு கடலைதான் வேண்டும் என்றால், மனிதர்களிடம் அகப்பட்டு அடிமையாகக் கிட" எனக் கோபத்துடன் சொன்னது பெண் குரங்கு.

இப்படி ஒவ்வொரு குரங்கும் பேச, சற்று நேரத்தில் அங்கே ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. "எல்லோரும் கொஞ்சம் வாயை மூடுகிறீர்களா?" என்று அதட்டியது தலைவன் குர்ங்கு. அவ்வளவுதான்... எல்லாக் குரங்குகளும் வாயை மூடிக்கொண்டன. சற்றுநேரம் அமைதியாகக் கழிந்தது. "நம் குரங்கு இனத்துக்குக் கடலை என்றால் மிகவும் பிடிக்கும். அப்படி இருக்க, நாம் ஏன் கடலையைத் தியாகம் செய்ய வேண்டும். மனிதர்களின் சூழ்ச்சியை நாமும் நம் சூழ்ச்சியால் ஜெயிக்க வேணடும்" என்றது.

பிறகு திடீரென்று "ஐடியா வந்துவிட்டது!' என்று விரலைச் சொடுக்கியது. சில நாட்கள் கழிந்தன. அன்று வழக்கம்போல் அந்தக் காட்டுக்குள் மனிதர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் குரங்குகள் ஒன்றையொன்று பார்த்து கண்ணடித்துக் கொண்டன.

மனிதர்கள் பல சொம்புகளில் கடலையைப் போட்டு, குரங்குகளின் பார்வையில்படுமபடி வைத்துவிட்டு, புதர்களின் பின்னால் மறைந்து கொண்டார்கள்.

இதுதான் சமயம் என்று குரங்குகள் மரத்தில் இருந்து கீழே குதித்து, சொம்புகளை நோக்கி ஓடிவந்தன. கண்சிமிட்டும் நேரத்தில், ஒவ்வொரு குரங்கும் ஒவ்வொரு சொம்பைத் தூக்கிக்கொண்டு ஒரே ஓட்டமாகக் காட்டுக்குள் ஓடி மறைந்தன.

குரங்குகளின் செய்கையைக் கண்ட மனிதர்கள் திகைத்தார்கள். "நம் சூழ்ச்சியை இந்தக் குரங்குகள் புரிந்துகொண்டன. குரங்குகளைப் பிடிக்கவந்து கடலையும் போச்சு, சொம்பும் போச்சே' என்று புலம்பியபடியே கிளம்பினார்கள். அன்று இரவு நடந்த குரங்குகளின் கூட்டத்தில்...

"பார்த்தீர்களா? எப்போதும் சூழ்ச்சியை சூழ்ச்சியால்தான் வெல்ல வேண்டும். பல 100 ஆண்டுகளாக மனிதர்கள் நம்மைப் பிடிக்க இந்த வழியைத்தான் பின்பற்றினார்கள். இனி அவர்கள் வேறு திட்டம் யோசிக்கப் பல காலம் ஆகும். அது வரை நாம் சந்தோஷமாக இருக்கலாம். எல்லோரும் போய் ஆடிப்பாடி இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள்" என்றது தலைவன் குரங்கு.

பல நாட்களுக்குப் பிறகு, அங்கே ஆட்டமும் பாட்டமும் அரங்கேறத் தொடங்கியது. ஒவ்வொரு குரங்கின் கையிலும் கடலை ஜொலித்தது!

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## திரைக்கலைஞன் எம்.என்.நம்பியார்



கதாநாயகனாக, வில்லனாக, குணச்சித்திர நடிகராகத் தமிழ் சினிமாவின் வரலாற்றின் விலக்க முடியாத கலைஞன் மஞ்சேரி நாராயண் நம்பியார் என்ற எம்.என்.நம்பியார்.

இவர் 1919 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி கேரள மாநிலம் பிரித்தானிய இந்தியாவின் மலபார் மாவட்டம், தற்போதய கண்ணூர் மாவ்ட்டம், சிரக்கல் வட்டத்தில் பெருவமூர் என்ற ஊரில் கேளு நம்பியார் என்பவருக்கு கடைசிக் குழந்தையாக பிறந்தார்.

இவர் தனது 13 வயதிலேயே சென்னை நவாப் ராஜமாணிக்கம் குழுவில் சேர்ந்து நாடகங்களில் நடித்தார். 1935 ஆம் ஆண்டு பக்த ராமதாஸ் என்ற படத்தின் மூலம் தனது திரையுலகப் பிரவேசத்தைத் துவங்கினார்.

கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ் சினிமாவின் தலை சிறந்த நடிகர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார் நம்பியார். மக்கள் திலகம் அமரர் எம்.ஜி.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இருவர் படங்களிலுமே நிரந்தர வில்லன் நடிகராக இடம் பெற்றிருந்தவர் நம்பியார். எம்.ஜி.ஆரின் மிக நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தார். இவர் நடிக்காத எம்.ஜி.ஆர் படங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். வில்லனுக்கு வில்லன் என்ற பட்டப் பெயரே இவருக்குண்டு.

வேட்டைக்காரன், ஆயிரத்தில் ஒருவன் மற்றும் எங்க வீட்டுப் பிள்ளையில் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் புதிய சகாப்தமே படைத்தார்கள்.

திகம்பரசாமியார் எனும் சூப்பர் ஹிட் படத்தில் 11 வேடங்களில் நடித்து சாதனை செய்தவர் நம்பியார் என்பது இன்னமும் பலருக்குத் தெரியாது.

1946 ஆம் ஆண்டில் தனது உறவினரான ருக்மணி என்பவரைத் திருமணம் புரிந்தார்.

நம்பியார் என்றதும் பலருக்கும் உடனே நினைவுக்கு வருவது சபரிமலை அய்யப்பன்தான். ரஜினிகாந்த் உட்பட தமிழ் சினிமா நடிகர்கள் பலருக்கும் இவர்தான் குருசாமி. தொடர்ந்து 65 ஆண்டுகளாக சபரி மலைக்குச் சென்று வந்தார் நம்பியார் என்பது குறிப்பிடத்தக்கது. வேலன் போன்ற சில தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்துள்ளார். திரையில்தான் வில்லனாக நடித்தாரே தவிர, நிஜ வாழ்க்கையில் எந்த தீய பழக்கமும் இல்லாத, கடவுள் பக்தி மிக்க நேர்மையான மனிதராகவே வாழ்ந்தார் நம்பியார்.

உடல் நலக்குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் 2008, நவம்பர் 19 அன்று மறைந்தார்.

05.2014
21

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 996 - புனித ரோமப் பேரரசின் மன்னனாக 16 வயதில் மூன்றாம் ஓட்டோ முடி சூடினான்.
- 1502 - போர்த்துக்கீச மாலுமி ஜொவாவோ டா நோவா புனித ஹெலெனா தீவைக் கண்டுபிடித்தார்.
- 1851 - கொலம்பியாவில் அடிமைத்தொழில் ஒழிக்கப்பட்டது.
- 1859 - பிக் பென் மணிக்கூடு முதன் முறையாக இயக்கப்பட்டது.
- 1864 - ரஷ்ய-கோக்கசஸ் போர் முடிவடைந்தது.
- 1894 - 22 வயது பிரெஞ்சு கொடுங்கோலன் எமிலி ஹென்றி கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- 1904 - பாரிசில் சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (FIFA) ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - அட்லாண்டாவில் இடம்பெற்ற பெருந்தீயில் பெரும் அழிவு ஏற்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பிரேசிலில் இருந்து 950 மைல் தூரத்தில் ரொபின் மூர் என்ற அமெரிக்க போர்க் கப்பல் ஜேர்மனியின் யூ-படகினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1991 - முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கருகில் மனிதக் குண்டுவெடிப் பொன்றில் கொல்லப்பட்டார்.
- 1991 - எதியோப்பியாவின் கம்யூனிச அரசுத் தலைவர் மெங்கிஸ்டு ஹைலி மரியாம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறினார். எதியோப்பிய உள் நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1994 - ஜேர்மன் மக்களாட்சிக் குடியரசு ஜேர்மன் குடியரசில் இருந்து விலகியது.
- 1998 - 32 ஆண்டுகள் இந்தோனேசியாவை ஆண்ட சுகார்ட்டோ பதவி விலகினார்.

### பிறப்புகள்

- கி.மு 427 - பிளாட்டோ, கிரேக்கத் தத்துவவியலாளர் (இ. கி.மு 347)
- 1919 - எம். என். நம்பியார், நடிகர் (இ. 2008)
- 1921 - அந்திரே சாகரொவ், ரஷ்ய இயற்பியலாளர் (இ. 1989)
- 1954 - டி. பி. எஸ். ஜெயராஜ், ஊடகவியலாளர்
- 1972 - நொடோரியஸ் பி.ஐ.ஜி, அமெரிக்க ராப் இசைக கலைஞர்

### இறப்புகள்

- 1991 - ராஜீவ் காந்தி, முன்னாள் இந்தியப் பிரதமர் (பி. 1944)
- 2000 - பார்பரா கார்ட்லண்ட், ஆங்கில நாவலாசிரியை (பி. 1901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிறந்த எண் 02 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்

08

### தோற்றம்

சந்திரனுடன் சுக்ரன் சேர்ந்த பலன் இவ்வாதிக்கர் அடைவர். சராசரி உயரத்திற்கும் அதிகமாக வளர்ந்த தோற்றம் இருக்கும். மிகவும் கவர்ச்சி மிக்க அழகான வடிவம் இவர்களுக்கு இருக் கும். கண்கள் அழகாக, அகலமாக, இரப்பை அழகு மிக அமைந்திருக்கும்.

சின்ன மூக்கு குண்டாக இருக்கும். சிறு வாய் சதைப் பற்றான உதடுகளுடன் இருக் கும். அளவான வடிவப்பற்கள் வரிசையாக இருக்கும். சதைப் பிடித்த கன்னங்கள் உரு ண்டை முகத் தோற்றம் தரும்.

அடர்ந்த அழகான முடி நெற்றியில் புரளும். காதலுக்கு ஏற்று மென்மையான சரீரம், கம்பீரமும், கவர்ச்சியும் தெரியும் வடிவை வழங்கும். கை, கால் அசையும் விதமும், செய்கைகளும் யாருக்கும் பிடிக்கும்படி எவர் மனதையும் கவர்ந்திழுக்கக் கூடியவையாக அமைந்திருக்கும். சிலருக்கு இலேசான மாறு கண் இருக்கலாம். பெண்மை கலந்த தோற்றம் இவர்களுடையது.

### குணம்

மனம்கூட பெண்களுக்குப் போல கருணையுடன், அன்பு மயமானதாக இருக்கும். நண்பரையும் வேண்டியவரையும் கவனிப்பதால் தாய் உள்ளம் கொண்டிருப்பார். கற்பனை, மகிழ்ச்சி கலை உள்ளம் அதிகமாக இருக்கும்.

குளிர்ச்சியான மனமும் உடலும் இருக்கும். தமக்கு வேண்டிய வரும் பெரிய நிலையை சாமர்த்தியங்களை, அறிவை, கல்வியை அடைய நினைப்பர். இதற்காக முயலுவர். ஒத்தமனம் உடையவர் கிடை க்க ஏங்குவர்.

நல்ல ரசிகராக எதையும் நுட்பமாக ஆழ்ந்து ரசித்து மகிழும் இவர், தம்மைப் போலவே தம்மவரும் பாடல்களை, கவிதையை, உலக உயர்ந்த சங்கதிகளை ரசித்து மகிழ வேண்டும் என விரும்புவர். இவர்களுக்கும், இவர்களோடு இருப்பவருக்கும் சாப்பாடு, வசதிகளுக்கு, பொழுது போக்குகளுக்கு குறைவிருக்காது. எப்போதும் உற்சாகம் பொங்க உரத்துப் பேசிக் கொண்டே இருப்பர்.

காதலிப்பர். அழகான பெண்ணையே காதலிப்பர். காதல் கல்யாணத்தில் முடியாது. காதலித்து அடிபடுவர். அவமானப்படுவர். காரணம், மிகமிகச் சிறிய வயதிலேயே காதலிப்பதுதான். உண்மையில் இவர்களுக்கு சமமான காதலுள்ளவர் கிடைக்கவே மாட்டார். இதுவே இவர்களு க்கு வேதனை தரும்.

கவிதை எழுதுவர். சோகக்கதை படிப்பர். படங்கள் பார்ப்பர். காவிய, காப்பியங்களில் தேர்ச்சி பெறுவர். இவர்களின் காதலுக்குத் தகுதியான காதலியாக பெண் நடை முறை உலகில் இருக்க மாட்டாள். இது இவர்களின் மிகப் பெரிய துக்கம். மனோ இராஜ்ஜியத்தில் கனவுச் செங்கோல் செலுத்தும் இவர் களால் உடலைவருத்தி உழைக்கமுடியாது. மூளையை மனத் திறனை வைத்து சம்பாதிக்கும் தொழிலையே விரும்புவர். சுக நாட்டம் உள்ளவர்தான் என்றாலும் சுயநலக்காரர் இல்லை.

புகழை விரும்புவர். மேலான வாழ்வை விரும்பும் இவர்கள் முட்டாள், நாகரிக மற்றோர், கலாசாரமற்ற மக்களுடன் பழகமாட்டார். ஆகையால் இவரைச் சிலர் தற்பெருமைக்காரர் என்பர். முகத்துதி பிடிக்கும். தம்மைப் பாராட்டிப் புகழுபவ ருக்கு ஏதாவது நன்மை செய்ய நினைப்பர். தம் மேல்நிலையை எவரும் குறைத்து மதிப்பிட விடமாட்டார்.

இவர்கள் பலவீனம் என்ன என்றால் தாட் சணி யமும், நல்ல பெயர் எடுக்க விட்டுக் கொடுப்பதுமே தான். இதனால் செலவு அதிகரிக்க இழப்பு ஏற்பட சங்கடப்படுவார். இவருடைய நல்ல குணம் இவரை இளிச்சவாயனாக்குவதும் உண்டு.

உயர்ந்த மனிதர், கல்வியாளர், பெரியவர், நல்லவர்களுடன் மட்டுமே பழகுவர். தீய பழக்கங்களை, தீயவர்களை விலக்கி விடுவர். சிறு வயதுத் தவறுகளைத் திருத் திக் கொண்டு விடுவர். எதையும் பயில நினைப்பர். போர்க் கலை, இசைக்கலை, மற்ற வித்தைகளைப் பழக நினைப்பர். யோகம், வேதாந்தம் கற்பர். ஜோதிடம், சாத்திரம் போன்றவற்றை அறிவர். வாழும் வகையைப் பிரசாரம் செய்வர். மிகவும் ஜாக்கிரதையாக இருப்பர்.

அபூர்வ வித்தைகள், அற்புத சங்கதிகளை அறியத் துடிப்பர். தேர்ந்தெடுத்த சமாசாரங்களையே படிப்பார். உணர்ச்சிவசப்படுவார். அதிர்ஷ்டம் உள்ளவர். கலைகள் பற்றியே இவரது பேச்சு இருக்கும். இவ்வுலக வாழ்க்கையே பெரிது என ஆதரித்து தர்க்கம் செய்வர். இசை, சுவையான சாப்பாடு, நல்ல பட்டாடை, பாதுகாப்பு, வசதியான வாழ்க்கை, காற்றும் வெளிச்சமும் உள்ள பெரிய வீடு, அதட்டி வேலை வாங்க வேலையாட்கள் வேண்டும் என்று நினைப்பர். இந்த எண் பெண்கள் இவற்றை அடைய எதையும்செய்வர்.



### குடும்பம்

பெண் தன்மையுடன் செயலிலும் எண்ணத்திலும் நளினம் உடைய இவர்கள், குடும்ப வாழ்க்கையை பெரிதும் விரும்புவர். அழகான வாழ்க்கைத் துணையாக இருப்பது போலதாமும் தமக்கு அப்படியே துணையைத் தேடிக் கொள்வர்.

குடும்பத்தை வாழ வைக்க நிறையச் சம்பாதிப்பர். சொத்துக்களைத் தேடுவர். பெண்களால் பாக்கியம் உண்டாகும். மனைவியால் நலமுண்டாகும். அதே சமயம் சகோதரிகள், மற்ற பெண்களால் துன்பமும் ஏற்படும். இவர்கள் விருப்பமாக நடப்பது போல பெண்களிடம் தகராறும் வைத்துக் கொள்ளுவர். சுமாரான குடும்பங்களில் மனைவியும் சம்பாதிப்பவளாய் இருக்கலாம். நெருங்கிய பெண்களானாலும் வாதம் செய்தால் வம்பு வரும். சில பெண்களே விரோதிகளாக அமைவதும் உண்டு. அலுவலகங்களில்கூட பெண்களின் போட்டியே சந்திக்க நேரிடும்.

### தொழில்

மென்தொழில்களான கலை சார்ந்த தொழில்கள் சிறப்பாக அமையும். கவி எழுதுதல், கதை, கட்டுரை இயற்றுதல், பத்திரிகையில் இருத்தல் அமையும். நல்ல சமையல் கலைஞர், விளையாட்டு வீரர், அழகுப் பொருட்களை தயாரிப்பவர். விற்பவர், பட்டு ஜவுளி வியாபாரி, வைர வியாபாரி, ஜோதிடர், சிறந்த விவசாயி என்று பலவகைத் தொழிலிலும் சிறந்து விளங்குவர் இவ்வாதிக்கர்.

வக்கீலுக்குப் படித்தால் பெரிய வக்கீலாக முடியும். மருத்துவம் படித்தால் பெண்கள், குழந்தைகள் வைத்தியர் நிபுணராகி விடுவர்.

### நோய்

சர்க்கரை வியாதி வரலாம். கண் கோளாறு வரலாம். வயிற்று வலி, அஜீரணம் ஏற்படும். தனியாக இருந்தால் தற்கொலை எண்ணம் உருவாகும்.

# உங்கள் பிறந்த எண் 02 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்

### தோற்றம்

சந்திரனில் கேது சேர்ந்த புயன் இவர்களுக்கு உண்டாகும். சதைப்பிடித்த கன்னம், எடுப்பான மூக்கு, தடித்த உதடுகள் கொண்டு வட்ட முகம் இருக்கும். மாநிற மேனி உயரமாக இருக்கும். நீண்ட முடி அடர்த்தியாக இருக்கும். இலேசான மாறுகண் உண்டு. வரிசையான பற்கள் அழகாக அமைந்திருக்கும். உடலில் பலமிராது. பார்வைக்குப் போர் வீரர் போல் இருக்கும்.

### குணம்

நல்லவரான இவர் இயற்கையிலேயே தீய நடத்தைக்கு எதிரானவர். மனிதநேயம் மிக்கவர். அமைதியை விரும்புவர். மாறுபட்ட கருத்து கூறித் தர்க்கம் செய்தாலும் அடிதடியில் இறங்கவேமாட்டார். அதை அநாகரிகம் என்பர். பெரியவர்களை மதிப்பர். அடக்கு முறைக்குப் பணியமாட்டார். இதனால் இவர் ஒரு துணிச்சல் காரராகத் தெரிவார். மதிப்பு மரியாதை, மானம் எனப் பார்த்து ஒழுங்காக நடப்பர். நல்லதை நினைத்து, நல்லதையே பேசி,நல்லதே செய்வர்.

தெய்வ நம்பிக்கை இருக்கும். மூட நம்பிக்கை இருக்காது. மனச்சாட்சிக்கு துரோகம் செய்ய மாட்டார்.

தூய ஆடை அணிவர், நல்ல பேச்சுப்பேசி புத்தி கூறி தவறானவரை தம்மைப்போல மாற்றிவிட முனைவர். சமமாகப் பழகினாலும் நல்லவர், வல்லவர் மேல் தனி மரியாதை கொண்டிருப்பர். பிறருக் காக இரங்குவர். முடிந்த உதவிகளைச் செய்வர். அதிக விளம்பரப்படுத்திக் கொள்ள அறியார். தம்மை விளக்கிச் சொல்ல மாட்டார்.

படித்தவருடன் அமர்ந்து அரட்டை அடிப்பர். பொதுநல சங்கதிகளை யும் அரசியலையும் நன்கு பேசி அலசுவார். பெரிய ஹோட்டல்களில் புதுப்புது வகை உணவைச் சாப்பிடுவர். புதிய ஆடை அணியப் பிரியப்படுவார். நெருங்கிய நண்பர் மிகச் சிலரே இருப்பர். ஆனாலும் மிகப் பலருடன் பழகுவார். பெரிய மனிதர் தொடர்பு அதிகமிருக்கும். ஆனாலும் பலனை எதிர்பார்க்க மாட்டார். தாமே வரும் மரியாதைகளை ஏற்றுக்கொள்ளுவார்.

வாய்ப்புக்களை ஏற்றுபயன் படுத்திக் கொண்டு முன்னுக்கு வருவர். எவருடனும் மோத மாட்டார். சண்டை சச்சரவுகளிலிருந்து விலகிப்போய் விடுவர். ரகசியங்களை சம்பந்தமில்லாதவரிடம் கூறவே மாட்டார். திட்டமிட்டு கச்சிதமாகக் காரியம் செய்வார்.

தோல்வி ஏற்பட்டாலும் ஒப்புக்கொண்டு விடுவார். அச்சம் மனதில் இருக்கும். ஆன்மிக சேவை செய்ய முயலுவார். பொதுச் சேவை புரிய அமைப்புக்களைத் தொடங்குவார். பார்வைக்கு ஏதும் அறியாதவர் போலத் தென்பட்டாலும் விபரமானவர். சிறு துன்பமும் பெரிதாகப்படும். ஆதலால் மிகவும் கவலைப்படுவார். யாருக்கும் தம்மால் துன்பம் நேர்ந்து விடக் கூடாதென கவனமாக இருப்பார்.

சில சங்கதிகளில் நுனிப்புல் மேய்பவராகவேயிருப்பார். மிகக் கூர்ந்து பார்த்தால் இவர்களிடமும் விருப்பு- வெறுப்பு இருப்பது புரியும். சிலபேரிடம் தனிப் பிரியம்கொண்டிருப்பார். வாழ்க்கையில் அவ்வளவு ரசனை இருக்காது. வாழ்வில் ஏதோ குறை நிரந்தரமாக இவருக்கு உண்டு. சொந்த வாழ்க்கையில் இன்பம் அடைய கோட்டை விடுவார்.

நடுவயதுக்கு மேலேயே வாழ்க்கையைப் புரிந்துகொள்வார். இருந்தாலும் சகிப்புத் தன்மை மிகவும் உடையவர். இவர் வாக்கிற்கு மிதிப்பு உண்டு. எவரும் இவரை வெறுக்க மாட்டார். இவர் தப்பாகப் பேசியதாகவும் யாரும் குறைபடார். இவர் எடுத்துக் கொண்ட பணிகளில் எவரும் இவரைக் குற்றம் சொல்ல மாட்டார். எதிலும் வெற்றி பெற்றுவிடுவார். பெருந்தன்மை உடையவர்.

### குடும்பம்

அடிப்படைச் செலவிற்கு சம்பாதித்து விடுவர். ஆனாலும் செலவாளியான இவர்களுக்குப் பொருள் பற்றாக்குறை இருக்கும். செய்கின்ற தொழில் வருமானத்தைத் தரும். புகழும் பிரபலமும் உண்டாகும். இவர்களுக்கு வரும் வாழ்க்கைத் துணைவிக்கு இவரிடம் கவர்ச்சி இருக்கும். ஆனாலும் சச்சரவு செய்வாள். அதுவும் ஒருவகை அன்பின் வெளிப்பாடே.

குடும்பத்தை மனைவியே நன்கு பார்த்துக் கொண்டு குழந்தையை பராமரிப்பாள். கணவன் மனைவியரே பிரச்சினைகளையும் தோற்றுவித் துக் கொண்டு தாமே முடிவும் காணுவர். சொந்த வீடு, வாசல், வசதி, பிற்பாதி வாழ்க்கையில் அமையும். மனைவியும் செலவாளியாக இருப்பார்.

### தொழில்

பத்திரிகை, எழுத்து, இசை, விளையாட்டு என பல துறைகளில் சிறக்க முடியும். பேச்சாளராக, கவிஞராக திகழ்வர். வைத்தியம், சட்டம், ஆன்மிகத் தொடர்பான தொழிலும் அமையும். சிறு வயதில் பட்டப் படிப்பு முடிந்ததும் வேலை கிடைத்தா லும் வேலைகளில் மாறி மாறி ஒரு வேலையைப் பெறுவர். நடுவயதுக்கு மேல்தான் நிரந்தரமாக இருக்க முடியும். பத்திரிகை ஆசிரியராக இருப்பார். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். பிற்காலம் மதிப்போடு நிம்மதியாக அமையும்.

### நோய்

உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, மூட்டுக் களில் வலி, அடிக்கடி காலில் அடிபடுதல் நிகழும். தலைவலி பிளக்கும். மனம் குழம்புவதைத் தவிர் த்தல் சிறுசிறு உள்ளச் சிதைவை தவிர்க்க உதவும். கண் கோளாறு ஏற்படும்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கஞ்சி வகைகளும் அவற்றின் மருத்துவக் குணங்களும்

சித்தமருத்துவத்தின்படி 'உணவே மருந்து மருந்தே உணவு' எனும் அடிப்படைத் தத்துவத்திற்கமைய நம் நாட்டுத் தட்ப வெப்பநிலை, நில வளம், நீர்வளம் என்பவற்றிற்கமைய எப் பிரதேசத்தில் ஒருவர் பிறந்து வாழ் கிறாரோ அப்பிரதேச உணவு, காய் கறி, வகைகளே அவரது உடலால் இலகுவில் ஏற்றுக் கொள்ளக்கூடி யதாக இருக்கும். நம் முன்னோர்கள் கூட நாம் உடல் நலம், வலிமை செழிப் புக்கள் பெற்று நீண்ட நாட்கள் வாழக் கூடிய முறையில் உணவுப் பழக்க த்தை ஏற்படுத்தியுள்ளனர்.

'மருந்தென வேண்டாவாம்
யாக் கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'
திருக்குறள்-942

முன் உண்ட உணவு செரித்த தன் மையை ஆராய்ந்து அறிந்த பின் தக்களவு உண்டால் உடம்பிற்கு மருந் தென ஒன்று வேண்டியது இல்லை. நாம் கஞ்சிவகைகளை எடுப்போமாயின் ஆரோக்கிய வாழ்க்கைக்கும் நோய் நிலைமைகளிலும் பல நோய்களில் பத்திய முறையாகவும் பல்வேறு வகை ப்பட்ட கஞ்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.



1.பாற்கஞ்சி

பசும்பாலில் சிவப்பரிசி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி பித்த எரிவை நீக்கு வதுடன் புத்தியும் சுக்கிலமும் விருத் தியாகும்.

2.பொரி சேர்த்த கஞ்சி

நெற்பொரி சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி மிகவும் சுவையாக இருப்பது டன் சிறுநீரை நன்கு வெளிப்படுத்தி முத்தோசங்களையும் (வாத, பித்த, கபம்) நீக்கக் கூடியதாக இருக்கும்.

3.கொள்ளுக்கஞ்சி

கொள்ளும்அரிசியும்சேர்த்துக்கல ந்து காய்ச்சிய கஞ்சியைக் குடித்தால் உடலை திடமாக வைத்திருப்பதோடுமேல திகமான கொலஸ்ரோல் உடலில் சேரு வதை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

4.சிறுபயற்றங் கஞ்சி

சிறுபயறும், சிவப்பரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி பித்ததோசத்தை வில க்கும்.

5. உழுத்தங்கஞ்சி

உழுந்து சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி வாத நோய்க்கு சிறந்ததாகும். அத்துடன் வளரும் குழந்தைகளுக்கு மிகவும் உகந்ததாகவுமுள்ளது.

சூடான கஞ்சி

குத்தரிசி உடன் வடித்த கஞ்சி துர் ப்பலம், வாதரோகம், தாகம் நீங்கு வது டன் நரம்புகளை பலப்படுத்தக் கூடிய தாகவும் இருக்கும். முக்கியமாக குன் மம்(வயிற்றுப் புண்)

நெஞ்செரிவு, வயிற்றுப் பொருமல், உள்ளவர்களுக்கு,

☛ வெந்தயக் கஞ்சி

புழுங்கல் அரிசி- 1 கப்
வெந்தயம்-1 தேக்கரண்டி
மிளகு, சீரகத்தூள்
உப்பு- தேவையானளவு

வாணலியில் அரிசி, வெந்தயத்தை தனித்தனியாக வறுத்தெடுக்கவும் ஆறிய பின்பு நன்கு பொடியாக்கி தேவையானளவு பொடியை எடுத்து நீர் சேர்த்து கரைத்து அடுப்பில் வைத்து வெந்ததும் உப்பு,மிளகு, சீரகத்தூள் அளவாகச் சேர்த்துக் கிளறி நீர்த்தன்மையான கஞ்சியாக எடுத்துப் பருக வேண்டும். முக்கியமாக வெந் தயத்திற்கு குடலில் ஏற்படும் புண்ணை ஆற்றும் நீக்கும் தன்மையிருப்பதுடன் கொல ஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் தன் மையும் உண்டு.

☛ தினைக்கஞ்சி

தினையரிசி-1/2 கப்
தேங்காய்ப்பூ-1/2 கப்
பாசிப்பயறு-50 கிராம்
உப்பு- தேவையான அளவு
பச்சை மிளகாய்-2
முருங்கைக் கீரை-1/2 பிடி
வெங்காயம்- நறுக்கியது 4

பயற்றை முளைவிட வைத்து தினையரிசியை உமி நீக்கி முளை விட்ட பாசிப்பயிறை கழுவி எடுத்து பாத்திரத்தில் இடுக. முருங்கைக்கீரை யைத் துப்புரவாக்கி கழுவி எடுத்து நறுக்கி எடுத்து பாசிப்பயறு இட்ட பாத்திரத்தில் தினையரிசி, துப்புரவாக் கிய வெட்டிய மிளகாய் (நீண்டதாக), வெங்காயம் முதலானவைகளையும் இட்டு வேக வைக்கவும். அளவாக வெந்ததும் முருங்கையிலையையும் சேர்த்துக் கொள்க. இவை ஓரளவு வெந்ததும் தேங்காய்ப் பாலையும் சேர்த்துக் கொள்க.

வெந்ததும் அளவாக உப்புச் சேர் த்து இறக்கிப் பரிமாறலாம். மிகவும் உயர்வான நிறை உணவாகும் அரசி, பாசிப்பயறு, முருங்கையிலை, தேங் காய்ப்பால் முதலான அனைத்தும் இவ்வுணவில் அடங்குவதனால் இவை நிறை உணவாகின்றன. நீரிழிவு நோயாளர் தினைக் கஞ்சியைத் தமது உணவில் சேர்ப்பது சிறப்பாகும். தேங் காய் சேர்க்காது இக் கஞ்சியை பருக லாம். ஓட்ஸ் கஞ்சிக்கு நிகராக இவற்றை பாவிக்க முடியும்.

☛ பொட்டுக்கடலை கஞ்சி

பயற்றம் பருப்பு-250g
நிலக்கடலை-100g
பொட்டுக்கடலை-150g
வெல்லம்-300g
குரக்கன்-200g

பயற்றம் பருப்பு குரக்கன் முதலான வைகளைக் கழுவிக் காயவைத்து. நிலக்கடலையை வறுத்துத் துப்புர வாக்கி பயற்றம்மா, குரக்கன்மா, வறுத்த நிலக்கடலை முதலானவை களை ஒரு பாத்திரத்தில் கலந்து கொள்ளவேண்டும். இக்கலவையுடன் சர்க்கரைத் தூளையும் சேர்த்துக் கலந்து கொள்ள வேண்டும். இக் கலவையில் தேவையான அளவு எடுத்து நீர் சேர்த்து அடுப்பில் சில நிமிடம் வேக வைத்து இறக்கி குழந் தைகளிலிருந்து வயோதிபர் வரை அனைவரும் பயன்படுத்தலாம்.


☛ சவ்வரசிக்கஞ்சி

சவ்வரசி-50g
சீனி/சக்கரை-70g
வறுத்த காய்ச்சான்-20g
ஏலக்காய்-7

கடலையை வறுத்து மாவாக்கி, சவ்வரசியை வறுத்தெடுத்து 750ml நீரை கொதிக்க வைத்து வறுத்த சவ்வரி சியை சேர்த்து 8 நிமிடங்கள் வரை வேகவிடவும். கடலை மாவை 250ml நீரில் கலந்து கொதிக்கும் சவ்வரி சியுடன் சேர்ந்து நன்றாக கிளறி விட வும்.பின்பு பொடிசெய்த சர்க்கரை, ஏலக் காய் பொடி முதலான வையை சவ் வரிசியுடன் சேர்த்து மேலும் 5 நிமிட ங்கள் வேக வைத்து இறக்கிக் கொள் ளவும்.இக்கஞ்சியானது உடல் உஷ்ண த்தை நீக்கி சிறுநீரை நன்கு வெளிப்படு த்தி உடலை குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள உதவும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



47

எனக்கு மூன்று மகன்கள். இரண்டு பேர் பள்ளிக் கூடம் போகிறார்கள்.

ஒருவன் வீட்டுக் காவலுக்காய் வெளியே நிற்கிறான்.

அவனுக்கு வயது நான்கு.

அவன் பெயர் வேப்பமரம்.

வேப்பமரம் அஃறிணையாயிற்றே என்று நீங்கள் அலட்சியப் புன்னகை சிந்தலாம்.

அதை முடிவு செய்ய வேண்டியது நான்.

அந்த வேப்பமரம் எனக்குள்ளே ஊற்றெடுக்க வைக்கும் அனுபவங்கள்- வீட்டுக்குள்ளே கைநீட்டி என்னைத் தொட்டுவிடத் துடிக்கும் தோழமை- என் மனநிலைக்கு ஏற்ற வண்ணம் நிறம் காட்டும் அந்த குணம்- எனது துக்கத்தில் அவன் அனுஷ்டிக்கும் மௌனம்- எனது சந்தோஷத்தில் அவனது தலையாட்டம்- காற்றோடு அவூன் நடத்தும் பட்டிமன்றம்- என் கார்ச்சத்தம் கேட்டால் சில்லென்று சிரிக்கும் சிநேகம்- இவைகளெல் லாம் என் உள் மனசுக்குள் உறவு வளர்த்த பிறகு என்னைப் பொறுத்த வரையில் அந்த வேப்பமரம் 'அது' அல்ல 'அவன்'.

என்னால் சில மனிதர்களை எப் படி உயர்திணையாய் ஒப்புக்கொள்ள முடியவில்லையோ அப்படியே அந்த வேப்பமரத்தையும் அஃறிணை என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை.

என் வீட்டுக்குவரும் விருந்தாளிகள் ஒவ்வொருவருக்கும் என் மகன்களை அறிமுகம் செய்து வைப்பதுபோல அவ னையும் அறிமுகம் செய்து வைக்கி றேன்.

இரவு எத்தனை மணிக்கு வந்தாலும் பையன்களுக்குப் பால் கொடுத்தீர்களா என்பது போலவே அவனுக்கு நீர் கொடுத்தீர்களா என்பதும் என் அன்றா டத் துணைக் கேள்வியாய் ஆகிவிட்டது.

நான் காட்டும் அன்பைவிட அவன் காட்டும் அன்பு அடர்த்தியானது.

ஒன்றை யோசித்தேன்.




பத்து மணிக்கு மேல் உள்ளே இருப் பவர்கள் உறங்கி விடுகிறார்கள்; வெளியே இருப்பவன் விழித்திருக்கிறானே!

என் வருகை கண்டதும் புரிந்து கொண்டதாய்ப் புளகம் காட்டுகிறானே!

என் வீட்டிலிருந்து எங்கிருந்து பார்த் தாலும் அவனே தெரிகிறானே!

ஹாலில் அமர்ந்தால் கரம் காட்டிறான்; முதல் மாடி ஜன்னல் வழியே முகம் காட்டுகிறான்; மொட்டை மாடியிலிருந் தால் தலை காட்டுகிறான்.

எங்கிருந்து பார்த்தாலும் அவனே தெரிகிறான்.

காலையில் எழுந்து கண்ணாடி ஜன்னல் வழியே அவன் முகம் பார்த்து விட்டுத்தான் நான் முகம் கழுவப் போகி றேன்.

இவன் எப்படி என்னில் இவ்வளவு ஐக்கியமானான்?

இவனைப் பார்த்தால் மனசெங்கும் பரபரவென்று பரவும் இந்த சந்தோஷம் எந்த ஜாதி?

என் வீட்டு வாசலுக்கு எப்போது வந்தான் இவன்?

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா பூங்கா விற்கு எழுதப் போன போது என் நாற்காலிக்கு நான்கடி தூரத்தில் அனாதையாய் முளைத்து அழுதுகொண் டிருந்தான் அவன்.

ஏதோ ஒரு சோகம் அவன் இலைகளில் சொட்டிக் கொண்டிருந்தது.

ஒரே பார்வையில் உற வானான்.

தொப்பூழ்க் கொடியை அறுத்துக் கொண்டு வரும் குழந்தையைப் போல், அவனை ஆணிவேர் பெயர்த்து அடி மண்ணோடு அழைத்து வந்தேன்.

என்னோடு பயணப்பட்டு என் பின் சீட்டை அழுக்காக்கி வீடு வந்தான்.

என் குடும்பத்தார்க்கு ஆசையோடு அவனை அறிமுகம் செய்தேன்.

இடம் மாறி வந்ததால் அவன் முகம் வாடியிருந்தான்.

அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தோம்.

அவனை வீட்டுக்குள் நடுவதற்கு விரும்பம்தான்; ஆனால் வீட்டுக்குள் இடமில்லை.

எனவே வீட்டுக்கு வெளியே ஜன் னலுக்கு எதிரே சாலையில் அவனுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாய் முடிவெடுத் தோம்.

அடுத்த நிமிடம் திசைக்கிருவர் பறந்தார்கள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் போர்க் கால நடவடிக்கையாய்க் காரியங்கள் நடந்தேறின.

செம்மண், ஆட்டு எரு, மணல் வந் திறங்கின.

செங்கல், சிமெண்ட்டோடு கொத் தனார் வந்திறங்கினார்.

பூங்காவிலிருந்து கடப்பாரையோடு என் காரிலேயே வந்த தோட்டக்காரர் கள் மூன்றடிக்கு மூன்றடி குழி எடுத்து முடித்தார்கள்.

அந்தக் குழியில் மண்ணும் மணலும் எருவுமிட்டு, கண்ணைப் போலக் கன்றை நட்டு அவன் தலை வழியே நீருற்றியதும் அது வரைக்கும் உறங் கிக் கொண்டிருந்த அவனது சிரிப்பு ஓரக்கண் விழித்துப் பார்த்தது.

-வைரமுத்து- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க முனைப்புகளுக்கே முன்னுரிமை அளிக்கவேண்டும்

## இலங்கையிடம் கோருகிறது கனடா

**நல்லிணக்க முனைப்புக்களுக்கே இலங்கை முன்னுரிமை அளிக்க வேண்டுமென கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாத்தறையில் அண்மையில் நடைபெற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் கனேடிய பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

அத்துடன் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களையும் கனடா பகிஷ்கரித்தது.

யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை விடவும் நல்லிணக்க முனைப்புக்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது.

இதேவேளை, சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை நிறுத்தப் போவதில்லை எனவும், ஆண்டுதோறும் நிகழ்வுகள் நடைபெறும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தறையில் இலங்கை அரசாங்கம் நடத்திய போர் வெற்றி நிகழ்வை தமது நாடு பகிஷ்கரித்தது என்பதை கனடா உறுதிப் படுத்தியிருக்கின்றது. ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வை கனடா புறக் கணித்ததாக இலங்கைக்கான கனடா தூதுவர் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், கனேடிய வெளிவிவகார அமைச்சரும் அதனை இப்போது உறுதிப்படுத்தியிருக் கின்றார்.

அரசாங்கத்தின் வெற்றி விழாக் கொண் டாட்டங்களை கடந்த வருடங்களிலும் கனடா புறக்கணித்தது எனத் தெரிவித்த கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட், இதற்கான காரணத்தை கொழும்பிலுள்ள கனேடிய தூதுவர் ஷெல்லி வைட்டிங் உள்ளூர் ஊடகங்களுக்கு விளக்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் இலங்கைக்கு தேவையாக இருப்பது நல்லிணக்க முயற்சிகளே எனத் தெரிவித்த கனேடிய வெளிவிவகார அமைச்சர், அதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் வெற்றி விழாக் கொண்டாட் டங்கள் உதவப்போவதில்லை.

இருந்தபோதிலும் மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளின் இந்தக் கருத்தைப் புறக்கணித்ததுடன், ஒவ்வொரு வருடமும் இந்த வெற்றி விழா நடைபெறும் எனவும் தெரிவித்தார். (2)

## பொது வேட்பாளரை தெரிவு செய்ய குழு நியமனம்

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின சார்பில் போட்டியிடும் பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய, கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின் மாநாயக்கர் மாதுலுவாவே சோபித தேரர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்க்கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து இந்தக் குழுவினை நியமிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளரை நியமிப்பது தொடர் பான கொள்கைகளை தயாரிப்பதே இந்தக் குழுவின் பிரதான பணியாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கு இந்தக் குழுவின் நடவடிக்கைகள் உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

பொது வேட்பாளர் தெரிவு தொடர்பில் மாதுலுவே சோபித தேரருக்கும் பல அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)



சீனாவில் நேற்று ஆரம்பமாகிய ஆசிய நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தும் நான்காவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை புறப்பட்டுச்சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவை சென்றடைந்தவேளை வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

## பிரேரணைமீதான விவாதத்தில் அனைவரும் கலந்து கொள்க

### ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த விவாதம் நேற்று நடைபெற்ற நிலையில் இன்றும் நடைபெறவுள்ளது.

இந்த விவாதத்தில் ஆளும் கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தவறாது பங்கேற்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

இது தனிப்பட்ட நபர் ஒருவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்ல, எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைத்து கட்சிகளும் இணைந்து இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை முறியடிக்க வேண்டியது கடமையாகும் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்சவோ அல்லது அவரது பிரதிநிதிகளோ பங்கேற் கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவாதத்தின் போது யார் யார் உரையாற்றுவது என்பது குறித்தும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மா னத் திற்கு ஆதரவாக சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

விவாதத்தின் பின்னரான வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சிகளின் சகல உறுப்பினர்களும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையை அரசாங்கம் போதைப் பொருள் இராச்சியமாக மாற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் சகல எதிர்க் கட்சிகளும் கருத்து வெளியிடவுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க, சபாநாயகரிடம் இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனையை ஒப்படைத்தார்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் 29 உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருந்தனர். (2)

## மோடிக்கு வாழ்த்து தெரிவிக்க மறந்த ராகுலும் சோனியாவும்

### பா.ஜ.க தலைவர்கள் குற்றச்சாட்டு

இந்திய பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் நரேந்திர மோடிக்கு காங்கிரஸின் தலைவி சோனியா காந்தி மற்றும் காங்கிரஸின் உபதலைவர் ராகுல் காந்தி ஆகியோர் வாழ்த்து தெரிவிக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் வெங்கையா நாயுடு இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்திய பொதுத்தேர்தலில் நரேந்திர மோடி வரலாறு காணாத பாரிய வெற்றி ஒன்றை பெற்றார்.

இதனையடுத்து அமெரிக்கா, சீனா உட்பட்ட பல நாடுகளின் தலைவர்கள் அவருக்கு வாழ்த்துக்களை வெளியிட்டனர்.

எனினும் இந்திய கலாசாரப்படி சோனியாவும் ராகுலும் நடந்து கொள்ளவில்லை என்று நாயுடு குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ், தமது உறுதிமொழிகளை நிறைவேற்ற தவறியமை காரணமாகவே அதனை மக்கள் நிராகரித்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

## இலங்கைக்கான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் ஆரம்பித்தது

இலங்கைக்கான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்திருந்த பொருளாதார தடையைத் தொடர்ந்து ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகம் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் ஜெனீவாவில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் அணுவாயுதம் தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையிலான உடன் படிக்கை ஒன்று கைச்சாத்தானது.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீதான பொருளாதார தடை தளர்த்தப்பட்ட நிலையில், மீண்டும் எண்ணெய் ஏற்றுமதியை ஆரம்பித்துள்ளது.

இதன்படி தென்னாபிரிக்காவுக்கும், இலங்கைக்குமான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் மீண்டும் ஆரம்பித்துள்ளதாக ஈரானின் சர்வதேச விவகார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் எண்ணெய் ஏற்றுமதி தொடர்பில் இலங்கையுடன் நீண்ட கால உடன் படிக்கை ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது. (2)

## 13 பொலிஸாருக்கு அதிரடி இடமாற்றம்

தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த 13 உத்தியோகத்தர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தம்புள்ள பிரதேசத்தில் நாளுக்கு நாள் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்புள்ள பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 13 பேர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி: தொழிலாளிகளை கொலை செய்த தனியார்மயம்



காயமடைந்த சுரங்கத் தொழிலாளி

முதலாளித்துவ இலாப வெறிக்கு பலியான சோமா சுரங்கத் தொழிலாளிகளுக்கு உண்மையான அஞ்சலி என்பது உலக தொழிலாளிகள் தனியார்மயத்துக்கு பாடை கட்டுவதில்தான் இருக்கிறது என்பதை துருக்கி போராட்டம் முன்னறிவிக்கிறது.

துருக்கியின் சோமா நகரில் அமைந்துள்ள சுரங்கம் ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (மே 13, 2014) பணிக்குழு மாற்றத்தின் (ஷிப்ட்) போது மின்சார கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. ஏறக்குறைய 420 மீற்றர் ஆழமுள்ள சுரங்கத்தில் சிக்கித் தவித்த சுமார் 800 தொழிலாளர்களை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டனர். 363 தொழிலாளிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். 201 தொழில்ாளிகள் கொல்லப்பட்டு உயிரற்ற உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன. சுரங்கத்தினுள்ளே சிக்கியுள்ள 200 இற்கும் மேற்பட்டவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை. எஞ்சிய தொழிலாளிகளை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்போது பலியானவர்களின் எண்ணிக்கை 301 ஆக உயர்ந்துள்ளது.

சோமா நகரம் மேற்கு துருக்கியில் உள்ள மனிசா மாகாணத்தில் அமைந்துள்ளது. தலைநகர் இஸ்தான்புலில் இருந்து 250 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள சோமா சுரங்கத்தில் மின்மாற்றியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வெடி விபத்துக்கள் நிகழ்ந்திருக்கிறது. விபத்து நடந்தவுடன் கார்பன் மோனாக்சைடு அதிக அடர்த்தியுடன் பரவி சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்கள் போதிய பிராண வாயு கிடைக்காமல் மாண்டு போயுள்ளனர்.

தரைக்கு அடியில் 2 கி.மீ ஆழத்தில் துவங்கிய இந்த வெடி விபத்தைத் தொடர்ந்து சுரங்கத்திற்குள் மின்தூக்கிகள் செயலிழந்து போயின. உள்ளே சிக்கியுள்ளவர்களில் பலரும் முக்கிய கதவிலிருந்து 4 கி.மீ தூரத்தில் இருக்கக்கூடும் எனத தெரிகிறது. பணிக்குழு மாறும் போது விபத்து நேரிட்டதால் இறந்தவர்கள், காணாமற்போனவர்கள் பற்றிய எண்ணிக்கையை துல்லியமாக கணக்கிட்டு சொல்ல முடியாது என்கிறார்கள். இறந்தவர்களில் 15 வயது சிறுவனும் அடக்கம்.

சுரங்கத்திற்குள் ஆக்சிஜனை



போராட்டக்காரர்களை ரப்பர் குண்டுகளால் தாக்கிய பொலிஸ்

செலுத்தியபடி மீட்பு பணியை துரிதப்படுத்த முயன்றாலும் இரண்டாவது பிரிவு சுரங்கத்தில் ஏற்பட்டுள்ள சரிவு மீட்புப் பணிகளுக்கு முட்டுக்கட்டையாக மாறிவிட்டது. சுரங்கத்தின் முக்கிய கதவை சுற்றிலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நின்று கையறு நிலையுடன் அழுதபடியே நின்று கொண்டிருக்கின்றனர்.


துருக்கியின் பிரதமர் எர்டோகன் கடந்த 2002 ஆம் ஆண்டு, கமால் அட்டாடுர்க்கின் மக்கள் குடியரசு கட்சியை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினார். இந்தியாவில் காந்தியிசம் என்ற பெயரில் மக்களை ஏய்த்து வரும் காங்கிரஸ் கட்சியைப் போன்று துருக்கியில் கமாலிசம் என்ற பெயரில் நாட்டை சுரண்டி வரும் கட்சி மக்கள் குடியரசுக் கட்சி. இக்கட்சியின் மக்கள் விரோத கொள்கைகளால் வெறுப்படைந்த மக்கள் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியைப் போன்று மதவாதம், கார்ப்பரேட் நலன்கள் மற்றும் உலகமயமாக்கத்துக்கு ஆதரவான எர்டோகனின் AKP கட்சியை தேர்ந்தெடுத்து, எண்ணெய் சட்டியிலிருந்து தப்பி எரிகிற நெருப்பில் விழுந்தனர்.

கடந்த 10 ஆண்டுகளில் துருக்கியின் பொருளாதாரம், கட்டுமானத் துறையில் (ரியல் எஸ்டேட்) தவிந்த நேரடி அன்னிய முதலீடுகளாலும், வெளிநாட்டுக் கடன்களாலும் வேகமாக வளர்ந்தது. கோட்டு-சூட்டு போட்ட முதலாளிகள் உலகளாவிய நிதிச் சூதாட்டம் மூலம் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். உழைக்கும் மக்களின் உரிமைகள் தொடர்ந்து சூறையாடப்பட்டன.

பன்னாட்டு தொழிலாளர் சபையின் (ILO) புள்ளிவிபரத்தின்படி பணியிடத்தில் உயிரைப் பறிக்கும் விபத்துக்களின் எண்ணிக்கையில் துருக்கி ஐரோப்பாவில் முதலிடத்திலும், உலகிலேயே 3ஆவது இடத்திலும் உள்ளது.

2005 இல் சுரங்கங்களை தனியார்மயமாக்கிய பிறகு தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு அம்சங்களை எந்த நிறுவனமும் முறையாக பின்பற்றவில்லை என்பது கண்கூடாக தெரிகிறது. இதுதான் விபத்துக்கு காரணம் எனத் தெரிந்தாலும் அரசு கள்ள மௌனம் சாதிக்கிறது.

விபத்து நடந்துள்ள சோமா நகர சுரங்கங்களில் வழக்கமான வருடாந்த பரிசோதனைகள் ஏதும் நடைபெறவில்லை என்பதை தொழிற்



மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் காயமடைந்த தொழிலாளி

சங்கங்கள் கடந்த ஏப்ரல் 29 அன்று சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால் அதனை ஆளும் கட்சியும், பிரதமர் எர்டோகனும் ஏற்றுக் கொள்ளாமல் அலட்சியம் செய்து சுரங்கத்தை நடத்தும் தனியார் நிறுவனமான சோமா கோமர்-க்கு ஆதரவாக நடந்து கொண்டனர். இந்த விபத்து நடந்த பிறகு அரசு இட்டுக் கட்டும் வேலைகளை துவங்கிவிட்டது. அதாவது 2012இலிருந்து கடந்த மார்ச் வரை ஐந்து முறை சுரங்கத்தை சோதனை செய்துவிட்டதாக தொழிலாளர் மற்றும் சமூக நலத்துறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.

1992இல் துருக்கியில் கருங்கடலுக்கருகில் ஸோங்குல்டாக்கில் நடந்த சுரங்க விபத்துதான் இது வரையில் அதிகமான பேரை பலி கொண்டதாக (270 பேர்) இருந்து வந்தது. அந்த சாவு எண்ணிக்கையை தற்போது தாண்டியுள்ள இந்த் விபத்தை தனியார்மயம் கொண்டு வந்த படுகொலை என்றுதான் அங்கு போராடுபவர்கள் கூறுகிறார்கள்.

அரசு மூன்று நாள் தேசிய துக்கம் அறிவித்துள்ளது. மத விவகாரங்களுக்கான தலைமையகம் துருக்கியில் உள்ள மசூதிகளில் எல்லாம் சோமா சுரங்கத்தில் இறந்தவர்களுக்காக வழிபாடு செய்ய உத்தரவிட்டுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளை புறக்கணித்து தொழிலாளர்களின் உயிரிழப்புக்கு வழி வகுத்த சுரங்க முதலாளி சோமா நிறுவனம் தனது இணைய பக்கத்தை கறுப்பு பக்கமாக்கி தனது துக்கத்தை பகிர்ந்து கொள்வதாக நாடகமாடுகிறது.

பிரதமர் எர்டோகன் செய்தியாளர்களிடம் பேசுகையில் உலகில் பல சுரங்க விபத்துக்கள் நடப்பதாகவும், அவற்றில் பிரிட்டனில் 19ஆம் நூற்றாண்டில் நடந்தவையும் அடங்கும் என்று விளக்கம் கூறியிருந்தார். எவ்வளவு முயன்றாலும் சிறு தவறுகள் நேருவது இயற்கைதான் என்றும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அதாவது முதலாளிகள் தமது இலாபக் குவிப்பை அதிகப்படுத்த தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு 19ஆம் நூற்றாண்டு முறைகளையே பயன்படுத்துவதை நியாயப்படுத்துகிறார்.

தொழிலாளர்கள் கொல்லப்பட்டதை கண்டித்து மக்கள் அரசுக்கு



சோமா சுரங்கத் தொழிலாளர்கள்

எதிராகவும், தனியார்மயத்துக்கு எதிராகவும் முழக்கங்களை எழுப்பியபடி அங்காராவில் அமைந்துள்ள எரிசக்தித் துறை அமைசசகத்தை நோக்கி பேரணி போகிறார்கள்.

இஸ்தான்புல்லில் அமைநதுள்ள கம்பனியின் சுவற்றில் 'படுகொலை' என்று எழுதுகிறார்கள. ஆளும் கட்சியின் அலுவலகம சூறையாடப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளிகளின் குடும்பத்தினர் சோமாவிற்கு வந்த பிரதமரின் காரை முற்றுகையிடுகிறார்கள். திருடன், கொலைகாரன் என்று திட்டி முழக்கமிடுகிறார்கள். இதை எதிர்கொள்ள இயலாத பிரதமர் எர்டோகன் தப்பியோடி அருகிலுள்ள சூப்பர் மார்க்கெட்டிற்குள் பொலிஸ் உதவியுடன் ஒளிந்து கொள்கிறார். இதனால் கோபமான அவரது ஆலோசகர் யூசுப் எர்கல் என்பவர் போராடும் ஒருவரை பொலிசாருடன் சேர்ந்து தாக்குவது போன்ற புகைப்படம் பத்திரிகைகளில் வெளியாகவே மக்களின் கோபம் இன்னும் அதிகரித்துள்ளது. சமூக வலைத்தளங்களில் பிரதமருக்கு எதிராக கண்டனங்கள் குவியத் தொடங்கியுள்ளன.

சுரங்க விபத்தையும், பாதுகாப்பற்ற பணிச்சூழலில் தொழிலாளர் உயிரிழப்பையும் கண்டித்து தேசத்தின் நான்கு முக்கிய தொழிற்சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை (மே 15) ஒருநாள் வேலை நிறுத்தம் அறிவித்தன. அங்காரா, இஸ்தான்புல் நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிக்கு வந்து போராடத் துவங்கியுள்ளனர். சிறு நகரங்களிலும் மக்கள் வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தன. சிக்கன நடவடிக்கைக்காக யார் தொழிலாளிகளின் பாதுகாப்பை குறைத்துக்கொள்ள உத்திரவிட்டார்களோ அவர்கள் இதற்கு பதில் சொல்லியாக வேண்டும் என அவர்கள் கூறியுள்ளனர். பொலிசார் தண்ணீர் குழாய்களாலும், கண்ணீர் புகைக்குண்டுகளாலும் போராடுபவர்களை எதிர்கொண்டாலும் அடக்க இயலாமல் திணறுகின்றனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதால் அதுபற்றிய கவலையில் ஆளும் கட்சி இருக்கிறது. சோமா சுரங்க முதலாளியின் மனைவி ஆளும் கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்கின்றவர். போராடும் பலரும் இளைஞர்கள். பிரதமரோ அடிப்படைவாதிகள் தமது அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்காக போராடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்ற செயல்கள் விசாரணைக்கு இலங்கை அரசு இடமளிக்க வேண்டும்

## மனிதவுரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

**யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் இடமளிக்க வேண்டுமென மனிதவுரிமை கண்காணிப்பகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்த தீர்மானத்திற்கு அமைவாக விசாரணைகளை நடத்த இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் பாரிய மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தீர்மானத் தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக மனிதவுரிமைப் பேரவையின ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையிலும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகள நடத்தப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனிதவுரிமைப் பேரவையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நியாயத்திற்காக காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை தொடர்ந்தும் இலங்கையில் நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற் பாட்டாளர்கள் மீது தொடர்ந்தும் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதில் அரசாங்கம் கரிசனை காட்டவில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்திருந்ததாகத் தெரிவித்துள்ளார். (2)

# உலக மலேரியா தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனி நாளை மறுதினம்

(யாழ்ப்பாணம்)

வளமான எதிர்காலத்திற்கான முதலீடு மலேரியாவை தோற்கடிப்பதே எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மலேரியா விழிப்புணர்வு நடைபவனி பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பித்து பருத்தித் துறை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் முடிவடையவுள்ளதாக யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கம் அறிவித்துள்ளது.

இவ்வேளையில் விசேடமாக கவனிக்கப்படவேண்டியவை,

- மலேரியா காணப்படும் நாடொன்றுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ளவும்.
- மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும் போது மலேரியாவை இனங்கண்டு கொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.
- காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங்காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.
- நுளம்புக் கடியிலிருந்து பாது காப்படைவதற்கு நுளம்பு எதிர்ப்பு (நுளம்புகளை விரட்டும் மருந்து) பூசப்பட்ட நுளம்பு வலைகளை பயன் படுத்தப் பழகிக் கொள்ளல் போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தி விழிப்புணர்வு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உயர் கல்வி பிரதியமைச்சர் ஓய்வு பெறுகின்றார்

அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக உயர்கல்வி பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி உக்குவெல பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஓய்வுபெற வேண்டிய காலம் வந்து விட்டது. புத்திஜீவிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமே தவிர ஊமைகளுக்கு அல்ல.

ஒரு கிலோ மீற்றர் வீதியை நிர்மாணிக்க ஒப்பந்தகங்களை வழங்க மதிப்பிடும் நிதியில் பாதியை இன்றைய அரசியல்வாதிகள் கொள்ளையிடுகின்றனர். இதனால் மதிப்பிடப்பட்ட நிதியின் மூலம் அரை கிலோ மீற்றர் வீதியை நிர்மாணிக்க முடிகிறது எனவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வனஜீவராசி மற்றும் வனவள அமைச்சர் விஜித முனி சொய்சா அடுத்த ஒரு தேர்தலில் மாத்திரம் போட்டியிட்டு விட்டு அரசியலில் இருந்து ஒதுங்க போவதாக கூறி யிருந்தார்.

இந் நிலையில், உயர்கல்வி பிரதியமைச்சரும் அரசியலில் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக தெரிவித்துள்ளார். (2)

## காணாமற் போனோர் குறித்து முறையிட இணையத்தளம்

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

www.pcicmp.lk என்ற பெயரில் அந்த இணையத்தளம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் இந்த இணையத்தளம் ஊடாக ஆணைக்குழுவிற்கு தகவல்களை வழங்க முடியும் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் அடுத்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

காத்தான்குடியில் அடுத்த மாதம் 6 ,7ஆம் திகதிகளிலும் மண்முனைப பற்று பிரதேசத்தில் 8,9 ஆம் திகதிகளிலும் ஆணைக்குழு கூடி விசாரணைகளை நடத்தவுள்ளது. (2)



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச கொழும்பு மாவட்ட பேராயர் வணக்கத்திற்குரிய மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் தான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தையும் அவரிடம் கையளித்தார்.

# இன்று ஒரு தகவல்

## ஞானமார்க்கம்

காடொன்றின் மத்தியிலே நிழல்தரும் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தடியிலே ஒரு ஞானி அமர்ந்திருந்தார். அக்காட்டுப் பக்கமாகத் தினமும் விறகு வெட்டுவதற்காக ஒருவன் வந்து போவான்.

வெட்டிய விறகினை விற்று அதன் மூலம் தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

இவன் அக்காட்டுப் பக்கம் வந்து போவதை அந்த ஞானி அவதானித்தார். "இதோ பார்... மரம் வெட்டுவதிலே உன் வாழ்நாளை வீணடிக்காதே ... இன்னும் சிறிது தூரம் காட்டிற்குள் முன்னேறிச் சென்றால், ஒரு செம்புச் சுரங்கம் இருக்கும். அதிலே ஒருநாள் வேலை செய்தால் ஒரு வாரத்துக்கு நீ கவலை கொள் ளத் தேவையில்லை. தினமும் வேலை செய்யவேண்டி இருக் காது அங்கே போ" என்றார்.

அவனுக்கு நம்ப முடியவில்லை!

" இந்த ஞானி ... எப்போது பார்த்தாலும் இந்த மரத்தடியிலே தான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருக்கிறார். இவருக்கு எப்படித் தெரிந்தது. அங்கேயுள்ள சுரங்கம் ? என்று யோசனை செய்தான்.

"இருந்தாலும் போய்த்தான் பார்ப்போமே" என்று நினைத்து காட்டினுள்ளே புறப்பட்டான். அவர் சொன்ன மாதிரியே ஒரு செம்புச் சுரங்கம் அவனது கண்ணிலே தென்பட்டது. அவன் அதிலே இணைந்து வேலை செய்தான். ஞானி கூறிய மாதிரியே ஒருநாள் வேலையின் ஊதியமே அவனது வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடிந்தது. குடும்பத்தையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அதோடு வரும் விருந்தாளிகளையும் உபசரிக்க முடிந்தது.

மறுபடியும் அந்த ஞானி அவனை அழைத்து இன்னும் சற்று உள்ளே போனால் ஒரு வெள்ளிச் சுரங்கம் இருக்கும். அங்கே ஒருநாள் வேலை செய்தால் போதும்... ஆறு மாதத்திற்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றார்.

இதையும் அவன் முதலில் நம்பவில்லை. இருந்தாலும் போய் பார்த்தான். அங்கே உண்மையாகவே ஒரு வெள்ளிச் சுரங்கம்.

மறுபடியும் ஒருநாள் வேலைசெய்தான்... ஆறுமாதத்திற்கு அவன் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தினான். இப்படியாக சில நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் ஞானியிடம் இவன் தானாகவே சென்றான். அப்போது ஞானி இவனைப் பார்த்து இன்னமும் நீ விபரம் புரியாமலா இருக்கிறாய் ... இன்னும் சற்று முன்னேறி போனால் ஒரு தங்கச் சுரங்கம் உன் கண்ணிலே தென்படும் என்று கூறினார்.

ஆசை யாரை விட்டது?...அங்கேயும் போனான். நாட்கள் நகர்ந்தன. அவன் ஒரு பெரிய பணக்காரனாக மாறிவிட்டான். செல்வம் நிறைய அவனிடம் இருந்தது. " இனிமேல் ஞானியைப் பற்றி நமக்கு என்ன கவலை " என்று இருந்து விட்டான்.

அதுமட்டுமல்ல... "அந்த ஞானியே விபரம் எதுவும் தெரியாதவர்" என்று நினைத்து விட்டான்.

ஏனென்றால் இப்படி ஒரு தங்கச் சுரங்கம் இருக்கிறது தெரிந்தும் அந்த நபர் கண்ணை மூடிக்கொண்டு உட்காந்திருக்காரே ...அவர் எப்போதும் ஒரு ஏமாளியாகத்தான் இருப்பாரோ. என்று நினைத்தான். அவரைப் போய் பார்க்கவே இல்லை.

ஒருநாள் ஞானியே இவனை அழைத்தார்.

என்ன இது.. இப்படியே இருந்துவிட்டால் எனக்கு வயது போய்க் கொண்டிருக்கிறது. நீ இன்னும் சற்றுத்தூரம் முன்னேறிப் போனால் வைரச் சுரங்கத்தையே பார்க்கலாம். நீ தங்கத்துடனேயே உன் நேரத்தை வீணடிக்கிறாய்" என்றார்.

அவன் பின்னர் வைரச் சுரங்கத்தையும் கண்டுபிடித்தான்.

பின்பு அவன் ஞானியிடம் நீண்ட நாட்களாக வரவில்லை.

ஞானி மரணப்படுகையிலே இருந்தார். உடனே வா... உன்னிடம் கடைசி இரகசியத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்று சொல்லி அனுப்பினான். வந்தான் அவர் முன்னால் நின்றான்.

வைரத்தை விட பெரிதாக என்ன இருந்து விட முடியும்?" இன்னும் முன்னேறி போ" என்று சொல்லப் போகின்றீர்களா? என்றார்.

ஆமாம் சற்று தூரம் நகர்ந்தால் அள்ள அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷம் இருக்கிறது. அதை நீ பார்க்கலாம் வைரச் சுரங்கம் தீர்ந்து போய்விடும் என்றார்.

சரி "இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிற நீங்கள் ஏன் இன்னமும் இந்த மரத்தடியிலே அமர்ந்திருக்க வேண்டும்" அந்தப் பொக்கிஷம் எனக்குள்ளே இருக்கிறது. அதற்காகத்தான் உன்னை அழைத்தேன்" என்றார். அவனால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை.

காட்டுக்குப் போனான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தான். அந்த பொக்கிஷத்தைக் அவன் கண்டு பிடித்தான். நாம் இப்போது வாழும் சூழ்நிலையிலே இது பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை... என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாமுக்கு கௌரவ பட்டம்

(லண்டன்)

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனைகளை பாராட்டி, உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்கள் பட்டியலில் 20 ஆவது இடத்தில் உள்ள ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியுள்ளது.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

இவரது சாதனைகளை கௌரவிக்கும் வகையில், ஸ்கொட்லாந்தின் முன்னணி பல்கலைக்கழகமான எடின்பர்க் பல்கலைக்கழகம், அப்துல் கலாமுக்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியுள்ளது.

# மத்திய அமைச்சரவை குறித்து மோடி தலைமையில் ஆராய்வு

## கட்சி தலைவர்களுடன் கூடி ஆலோசனை

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவை பட்டியல் தயாரிப்பு குறித்து ஆர்எஸ்எஸ் மற்றும் பா.ஜனதா தலைவர்களுடன் நரேந்திர மோடி தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ள நிலையில், முக்கிய இலாகாக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்படவுள்ளது என்பது குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள பா.ஜனதா கட்சி, அமைச்சரவையில் யார் யார் இடம் பெறுவது என்பது குறித்த ஆலோசனையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் பதவியை ஏற்கப்போகும் நரேந்திர மோடி, டில்லியில் உள்ள குஜராத் பவனில் தங்கியிருந்து பா.ஜனதா, ஆர்.எஸ்.எஸ். மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் அமைச்சரவையில் முதல் 4 உயர்மட்ட இலாகாக்களாக கருதப்படும் உள்துறை, நிதித் துறை, வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவற்றை யார் யாருக்கு வழங்கலாம் என்பது குறித்த ஓர் முடிவு எட்டப்பட்டுள்ள்தாக தகவல் வெளியாகியுள்ளது.

உள்துறை இலாகாவை கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் எதிர்பார்ப்பதாக கூறப்படும் நிலையில், அந்த துறையை மோடி தானே வைத்துக் கொள்ள விரும்புவதாகவும், ஒரு வேளை ராஜ்நாத் சிங் உள்துறையை கட்டாயம் வேண்டும் என பிடிவாதம் பிடித்தால், உள்நாட்டு பாதுகாப்பு இலாகாவை மட்டும் தானே வைத்துக்கொள்வ்து என்று மோடி நினைப்பதாகவும் பா.ஜனதா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறம் இருக்க, நிதித் துறைய்யை அருண் ஷோரிக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவர் முந்தைய வாஜ்பாய் அமைச்சரவையில் பங்கு விலக்கல் துறை அமைச்சராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று பாதுகாப்புத் துறையை முரளி மனோகர் ஜோஷிக்கும், அருண் ஜெட்லிக்கு வெளியுறவுத் துறை இலாகாவை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியுறவுத் துறை மீது கண் வைத்திருந்த சுஷ்மா சுவராஜுக்கு மனிதவள மேம்பாட்டுத் துறை இலாகாவை வழங்கி அவரை சமாதானப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

மேலும் கட்சியின் மூத்த தலைவரான எல்.கே. அத்வானி, தம்மை விட ஜூனியரான மோடி தலைமை வகிக்கும் அமைச்சரவையில் அவருக்கு கீழ் அமைச்சராக பணியாற்ற முடியாது என்பதால், அவருக்கு மக்களவை சபாநாயகர் பதவி கொடுக்கலாமா என ஆலோசிக்கப்பட்டது.

ஆனால் அவருக்கு வயதாகி விட்டதால், அப்பணியை மேற்கொள்வது சிரமம் எனக்கருதி கட்சியையும், அரசையும் வழிகாட்டும் தலைவராக இருக்குமாறு கேட்டுக் கொள்வது என்றும், பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலத்திற்கு பின்னர் அத்வானியை ஜனாதிபதியாக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அத்வானிக்கும் சபாநாயகர் பதவியை ஏற்பதில் ஆர்வம் இல்லை எனக் கூறப்படுகிறது.



கொலம்பியா நாட்டில், இம்மாத இறுதியில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தலைநகர் பக்கோட்டாவில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ஜனாதிபதி ஜுவான் மானுவேல் சான்டோஸ்.

# தாய்லாந்தில் இராணுவ சட்டம் அமுல்

(பாங்கொக்)

தாய்லாந்தின் பிரதமர் யிங்க்லக் ஷினவத்ரா பதவி விலக வேண்டும் என்று கோரி கடந்த ஆண்டு இறுதியில் தொடங்கிய போராட்டங்கள் அங்கு நாளுக்குநாள் அதிகரித்துவந்ததே தவிர பிரச்சினைகளுக்கு எந்த முடிவும் ஏற்படவில்லை.

எதிர்க்கட்சிகள் தந்த நெருக்கடி தாளாமல்தான் பதவியிலிருந்து விலகுவதாக யிங்க்லக் அறிவித்தபோதும் தொடர்ந்து காபந்து பிரதமராக பதவியில் நீடித்தார்.

அதேபோல் அவர்களின் எதிர்ப்பை மீறி கடந்த பெப்ரவரி மாதம் அங்கு பொதுத தேரதலையும் அவர் நடத்தினார்.

யிங்க்லக் பதவி விலகி புதிய ஆட்சி அமைப்பு ஏற்பட்டாலே அடுத்த தேர்தலுக்கு ஒத்துழைப்பு அளிக்கமுடியும் என்று கூறும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஆழமான இந்த அரசியல் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் விதமாக நேற்று முன்தினம் அதிகாலை அங்கு இராணுவசட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியையும், சட்ட ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக இந்த முடிவு எடுககப்பட்டதாக தாய்லாந்து இராணுவம தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் ஒரு கட்டமாக போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இயங்கிவந்த பல தனியார் தொலைக் காட்சி நிலையங்களை இராணுவத்தினர் தங்களது கட்டுக்குள் கொண்டுவந்தனர். கடந்த 1932-ஆம் ஆண்டு தாய்லாந்தில் மன்னராட்சி முடிவுக்குவந்தது.

# தெற்கு சூடான் அகதிகளின் பராமரிப்புக்கு அமெரிக்கா ஐந்து கோடி டொலர் நிதியுதவி

(ஜுமா)

தெற்கு சூடான் கடந்த 2011 ஆம் ஆண்டு சூடானிலிருந்து பிரிந்து தனி நாடு என்ற அந்தஸ்தினைப் பெற்றது.

இந்த நாட்டின் முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மச்சரால் தூண்டி விடப்பட்ட அரசு எதிர்ப்புப் போராட்டம் கடந்த டிசெம்பரில் இருந்து தீவிரமடைந்துள்ளது.

இதனை முறியடிக்க அந்நாட்டின் ஜனாதிபதி சல்வார் கிர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் படையினர் உதவிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், அந்நாட்டின் எண்ணெய் உற்பத்திப் பகுதிகளில் தொடர்ந்து சண்டை நீடித்து வருகின்றது.

முன்னாள் துணை ஜனாதிபதி சதி முயற்சியின் மூலம் வன்முறையைத் தூண்டி விட்டு நாட்டை அழிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றார் என்று ஜனாதிபதி சல்வார் கிர் குற்றம் சாட்டி வருகின்றார்.

நாட்டின் எண்ணெய் வளம் மிக்க பகுதிகளான் யூனிட்டி மற்றும் அப்பர் நைல் ஸ்டேட் பகுதிகளில் உள்ள நகரங்களிலிருந்து புரட்சியாளர்களை விரட்டும் முயற்சியில் அரசு



தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

இங்கு தொடரும் வன்முறைகளும், அமைதியின்மையும் நாட்டின் உயிர் நாடியான பொருளாதார வளத்தைப் பாதித்து விடக்கூடும் என்ற அச்சம் அரசுக்குத் தோன்றியுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் மாதங்களில் தெற்குசூடான் நாட்டின் சில பகுதிகள் கடுமையான உணவுப் பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும் என்ற பீதியும் ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் இவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை தற்காலி கமாக பூர்த்தி செய்வதற்கு சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐ.நா.சபை தெரி வித்துள்ளது.

இதனையடுத்து, தெற்கு சூடான் அகதிகளின் நிவாரணத்துக்காக 50 மில்லியன் டொலர்களை வழங்க அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

# ஈழத்தமிழர்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துவேன்; வைகோவிடம் நரேந்திர மோடி உறுதியளிப்பு

(சென்னை)

பிரதமராக பொறுப்பு ஏற்க உள்ள குஜராத் முதல் மந்திரி நரேந்திர மோடியை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் சந்தித்து பேசினார்.

வைகோவை பார்த்தவுடன் ஆரத்தழுவி வரவேற்ற நரேந்திர மோடி, "நீங்கள் தோற்றது மிகவும் வருத்தம் அளிக்கிறது" என்றார்.

அதற்கு வைகோ, "நீங்கள் ஈட்டி இருக்கின்ற இமாலய வெற்றி எல்லையற்ற குதூகலத்தில் ஆழ்த்துகிறது" என்றார்.

விடுதலைக்கு பிறகு இந்திய வரலாற்றில், ஒரு மகத்தான வெற்றியை ஈட்டி இருக்கின்றீர்கள். இந்திய நாட்டுக்கு ஒரு புதிய விடியலை நீங்கள் தருவீர்கள் என்று கோடானு கோடி மக்கள் நம்பிக்கையோடு வாக்கு அளித்து இருக்கிறார்கள். இந்தியாவுக்கு நீங்கள் ஒரு புதிய விடியலைத் தருவீர்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

தமிழ்நாடு முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு நீங்கள் வாழ்த்து சொன்னது, உங்கள் உயர்ந்த தலைமைப் பண்பை காட்டுகிறது. அனைத்து மாநிலங்களையும் அரவணைத்துச் செல்லும் போக்கைத் தெரிவிக்கிறது என்று வைகோ கூறியபோது,

"ஒடிசா முதல்-மந்திரி நவீன் பட்நாயக், ஹரியானா முதல்-மந்திரி பூபிந்தர்சிங் ஹூடா ஆகியோரோடும் பேசினேன்.

மத்திய அரசு ஒத்துழைப்புத்தரும என்று சொன்னேன்" என்றார் மோடி.

"தமிழ்நாட்டில் நமது அணி நல்ல வெற்றி பெற்று இருக்கிறது. தி.மு.க., அ.தி.மு.க. அல்லாமல் 2 இடங்களில் வெற்றி பெற்று இருக்கிறோம். பல இடங்களில் 2 ஆவது இடத்தை பெற்று இருக்கின்றோம். தமிழகத்தில் முதன் முறையாக 75 இலட்சம் வாக்குகளை பெற்று இருக்கிறோம். ம.தி.மு.க. போட்டியிட்ட 7 இடங்களில், இரண்டு இடங்களில் 2 ஆவது இடத்தைப் பெற்றோம்.

தி.மு.க. அணி மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது என்றார் வைகோ.

2016 சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் நல்ல மாற்றம் வருவதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வைகோ கேட்டுக்கொண்டதற்கு, அப்போது மோடி, "நாம் தொடர்ந்து இணைந்து பணி ஆற்றுவோம்" என்றார்.

தென்னக நதிகள் இணைப்புக்கு முதல் இடம் தாருங்கள் இமாலய நதிகள் இணைப்பு நடக்கட்டும் என்று வைகோ சொன்னபோது. "முதல் வேலையாக நதிகள் இணைப்பைத் தொடங்கச் செயலாற்றுவேன்" என்றார்.

ஈழத்தமிழர்கள் பாதுகாப்புக்கு மோடி அரசில் வழி பிறக்கும் என்று குறிப்பிட்டேன் என்றதற்கு, "ஈழத்தமிழர்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துவேன்" என்றார் நரேந்திர மோடி.

எல்.கே.அத்வானியை அவரது இல்லத்தில் வைகோ சந்தித்தார்.

அதனை தொடர்ந்து பாரதீய ஜனதா கட்சித்தலைவர் ராஜ்நாத் சிங்கை வைகோ சந்தித்து பேசினார்.

"இவ்வளவு மகிழ்ச்சியான வெற்றியிலும், நீங்கள் தோற்றதுதான் எனக்கு மிகுந்த வேதனை தந்தது" என்றார் ராஜ்நாத்சிங்.

நரேந்திர மோடிதான் பிரதமர் வேட்பாளர் என்று, தொலைநோக்குப் பார்வையுடன் நீங்கள் அறிவித்தது தான், இந்த மாபெரும் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது என்று வைகோ கூறினார். பஞ்சாப் முதல்-மந்திரி பர்காஷ்சிங் பாதலை சந்தித்து பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பாராளுமன்றத் தேர்தல்-2014



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD. Durham
முன்னாள் துணைவேந்தர்

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் பற்றி அறியவும் தேசிய,சர்வதேச ரீதியில் இதனது தாக்கங்கள் பற்றி ஆராயவும் உலகளாவிய ரீதியில் பல அரசியல் பிரமுகர்களும் ஆய்வாளர்களும் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்தியத் தேர்தல் செயற்பாடுகள் மிகவும் பிரமிக்கத்தக்கன. இந்தியாவின் இன்றைய மக்கள் தொகை 1200 மில்லியனைக் கடந்து விட்டது. இதில் தகுதிபெற்ற வாக்காளர் எண்ணிக்கை 814.5 மில்லியனாகும்.

2009 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்பு புதிதாகப் பதிந்த வாக்காளர் எண்ணிக்கை 100 மில்லியனுக்கு மேற்பட்டுள்ளது. இந்தியத் தேர்தலில் பங்கு கொள்ளும் வாக்காளர் எண் ணிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஐக் கிய அமெரிக்காவினதும் வாக்காளர்கள் கூட்டுத் தொகையிலும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இத் தேர்தலை நடத்துவதற்கு 11 இலட்சம் அதிகாரிகளும் 55 இலட்சம் ஊழியர்களும் தேவைப்படுகின்றனர். இத் தேர்தலுக்கு 14 இலட்சம் வாக்களிக்கும் கணனி இயந்திரங்கள் 9,30,000 வாக்களிப்பு நிலையங்களில் பயன்படுத்தப்பட்டன.

தேர்தலுக்கான செலவு 3500 மில்லியன் இந்திய ரூபாவுக்கு மேல் கணக்கணிக்கப்பட்டுள்ளது. பெரிய தொகுதிகளுக்கு வேட்பாளர் ஒருவர் செலவழிக்க தேர்தல் ஆணையம் நிர்ணயித்த தொகை 70 இலட்சம் ரூபாவாகும். சிறிய யூனியன் பிரதேசத் தொகுதிகளுக்கு வேட்பாளர் ஒருவருக்கு அங்கீகரிக்கப்பட்ட செலவு ரூபா 54 இலட்சமாகும். மேற்குறிப்பிட்ட விபரங்கள் ஆச்சரியம் தரவல்லன.

இந்தியாவின் நிலப்பரப்பு, வாக்காளர் எண்ணிக்கை மற்றும் காலநிலை,சமூக-பண்பாட்டு காரணங்க ளால் இன்று தேர்தலை நாடு முழுவதும் ஒரே நாளில் நடத்தி முடிப்பது கடினம். இவ்வருடத் தேர்தல் ஏப்ரல் 7 இல் தொடங்கிய தேர்தல் பணி ஒன்பது கட்டங்களாக மே 12 ஆம் திகதி வரை நடத்தப்பட்டு மே 16 ஆம் திகதி முடிவுகள் வெளியிடப்பட்டன.

தேர்தல் நடத்தி முடிக்க ஐந்து கிழமைகளுக்கு மேல் சென்றாலும் முடிவுகள் சில மணி நேரத்திற்குள் வெளிவந்து விட்டன. இச் சிறப்பு இலத்திரனியல் வாக்கு அளிக்கும் முறையால் கிடைத்தது எனலாம்.

இந்தியா பல கட்சிகளைக் கொண்ட ஜன நாயக நாடு. இங்கு தேர்தல் ஆணையம் மிகவும் அதிகாரம் கொண்டது. நாட்டில் 1616 கட்சிகள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் விதிமுறைக் கமைய இந்தியாவில் 6 கட்சிகள் தேசிய கட்சிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவையாவன

(i) இந்திய தேசிய காங்கிரஸ், (ii)பாரதீய ஜனதாக்கட்சி, (iii)இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ட்), (iv)இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, (v)பகுஜன் சமாஜக் கட்சி, (vi) தேசிய காங்கிரஸ் கட்சி மேலும் 47 கட்சிகள் பிராந்தியக் கட்சிக ளாக அங்கீகாரம் பெற்றுள்ளன.

1563 அங்கீகாரம் பெறாத கட்சிகள் இயங்குகின்றன. கட்சிகளின் எண்ணிக்கை அரசியல் செயற் பாட்டைத் காட்டி நிற்கின்றன.

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் (First Pass Post) முறையில் இடம்பெறுகின்றது. ஒரு தொகு தியில் ஆகக் கூடிய வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். இம் முறையே இன்றும் இங்கிலாந்தில் இருக்கின்றது.

இலங்கையில் 1977 இற்கு முன்னர் இம்முறையே கடைப்பிடிக்கப்பட்டது. எனினும் இன்று விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துடன் கூடிய விருப்பு வாக்குமுறை கடைப்பிடிக் கப்படுகின்றது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் தொகுதி நிலப்பரப்பாலும் மக்கள் தொகை மற்றும் வாக்காளர்களாலும் மிகப் பெரியவை. உதார ணமாக அருணா சல பிரதேசம் இரண்டு தொகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இது போல மிசோரம், நாகலாந்து மாநிலங்களுக்குமுறையே ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. சில தொகுதிகளில் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களும் இருக்கின்றனர்.

மேலும் இத் தொகுதிகள் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன

(i) பொதுவான தேர்தல் தொகுதிகள் - இவற் றில் யாரும் போட்டியிடலாம்.

,(ii )பின் தங்கிய சமூகத் திற்குரிய தனித் தொகுதிகள் (BC) இதில் பின் தங்கிய சமூகத்தவர் மாத்திரமே போட்டியிட முடியும்.,

(iii) பழம் குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் தொகுதி (ST) இதில் பழங்குடி மக்களே போட்டியிட முடியும்.

அட்டவணை I இல் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் ரீதியாகத் தேர்தல் தொகுதி எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

| மாநிலம் | தேர்தல் தொகுதி | மாநிலம் | தேர்தல் தொகுதி |
|---|---|---|---|
| ஆந்திரா | 42 | மணிப்பூர் | 02 |
| அருணாசல பிரதேசம் | 02 | மிசோரம் | 01 |
| அஸாம் | 14 | நாகலாந்து | 01 |
| பீஹார் | 40 | ஒடிசா | 21 |
| சட்டிஸ்கார் | 11 | பஞ்சாப் | 13 |
| கோவா | 02 | ராஜஸ்தான் | 25 |
| ஹரியானா | 10 | சிக்கிம் | 01 |
| குஜராத் | 26 | தமிழ்நாடு | 39 |
| இமலாய பிரதேசம் | 04 | உத்திரப் பிரதேசம் | 80 |
| ஜம்மு காஷ்மீர் | 06 | உத்திர காந்த் | 05 |
| ஜார்கண்ட் | 14 | மேற்கு வங்காளம் | 42 |
| கர்நாடகா | 28 | | |
| மத்திய பிரதேசம் | 29 | | |
| மகாராஷ்டிரா | 48 | | |
| யூனியன் பிரதேசங்கள் | | | |
| அந்தமான் நிக்கோபார் | 01 | ரட்ராநகர் கவலி | 01 |
| டமன் டியூ | 01 | லக்சதீவு | 01 |
| புதுடில்லி | 07 | புதுச்சேரி | 01 |

16 ஆவது மக்களவைத் தேர்தலில் 8251 வேட்பாளர்கள் கட்சிகள் வழியாகவும் சுயேட்சைகளாகவும் தேர்தலில் பங்கு கொண்டனர். தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்பாக தேர்தலில் மூன்று அணிகள் இடம்பெறுவது போல் இருந்தது. எனினும் 3ஆவது அணி உருவாக்க முடியாது போயிற்று. இத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியும் தனித்து கூட்டணியாக இறங்கினர். பாரதீய ஜனதாக் கட்சி தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரிலும் காங்கிரசின் தலைமையில் ஐக்கிய முற்போக்கு முன்னணியில் பல கட்சிகள் இணைந்தன. இவ்விரண்டு அணிகளுக்கு வெளியில் பலமான பிராந்தியக் கட்சிகள் தனித்தும் மாநில மட்டத்தில் அமைத்துக் களத்தில் இறங்கின.

தேசிய ஜனநாயக முன்னணியிலும் ஐக்கிய முற்போக்கு முன்னணியிலும் பங்கு பற்றிய கட்சிகளும் அவைகள் போட்டியிட்ட தொகுதி எண்ணக்கைகள் பின்வருமாறு.

| தேசிய ஜனநாயக முன்னணி | |
|---|---|
| பாரதீய ஜனதாக் கட்சி (B.J.P) | 427 |
| தெலுங்கு தேசம் (T.D.P) | 30 |
| சிவசேனா (S.S.) | 20 |
| தேசிய முற்போக்கு திராவிடக்கழகம் (D.M.D.K) | 14 |
| சிரோமணி அக்காலிதொன் (S.A.D) | 10 |
| பாட்டாளி மக்கள் கட்சி (P.M.K) | 08 |
| லோக் ஜனதாள் (L.D) | 07 |
| ராஷ்ரிய லோக் சமத்தாக் கட்சி (R.L.S.P) | 07 |
| ஹரியானா ஜனற்கொன்பிரன்ஸ் (H.J.C) | 02 |
| அப்னடால் (A.A.D) | 02 |
| சுவாகி மணிக் கட்சி (S.W.P.) | 02 |
| இந்திய ஜனநாயக் கட்சி (I.D.P) | 01 |
| கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி (K.M.T.D) | 01 |
| அகில இந்திய N.R. காங்கிரஸ் (A.I.N.R.C) | 01 |
| இந்தியக் குடியரசு கட்சி (I.R.P) | 01 |
| ராஷ்ரிய சமாஜக் கட்சி (R.S.P) | 01 |
| புரட்சிக சோசலிக்கட்சி (R.S.P) | 01 |
| கேரளா காங்கிரஸ்கட்சி (K.C.P) | 01 |
| இந்திய தேசியக் கட்சி (I.N.P) | 01 |
| நாக மக்கள் முன்னணி (N.M.F) | 01 |
| மிசோ மக்கள் முன்னணி (M.M.F) | 01 |
| | 542 |

| ஐக்கிய முற்போக்கு முன்னணி | |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ் (I.N.C) | 462 |
| ராஷ்ரிய ஜனதாதள் (R.J.D) | 28 |
| தேசிய காங்கிரஸ் கட்சி (N.C.P) | 23 |
| ராஷ்ரிய லோக் தாள் (R.L.D.) | 08 |
| ஜார்க்கண்டு முத்தி மோட்ச (J.M.M) | 04 |
| ஜம்மு காஷ்மீர் தேசியக் கட்சி (J.K.N.P) | 03 |
| இந்திய முஸ்லிம் லீக் (I.M.L) | 02 |
| சோசலிஸ்ட ஜனதா (S.J.) | 01 |
| கேரளா காங்கிரஸ் (K.C) | 01 |
| புரட்சிகர சோசலிசக்கட்சி (R.S.P) | 01 |
| போடோலாந்து மக்கள் முன்னணி (B.M.F) | 01 |
| | 537 |

இவ்விரு அணிகளுக்கு வெளியில் தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் அ.தி.மு.க 40 தொகுதிகளில் போட்டியிட்டது. இதேபோல் தி.மு.க.தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 40 தொகுதிகளிலும் போட்டியிட்டது.

மேற்கு வங்கத்தில் திரிணாமூல் கட்சி 42 தொகுதிகளில் போட்டியிட்டது. ஒடிசாவில் ஜனதாள் 21 தொகுதிகளில் போட்டியிட்டது. தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்ரிய சமித்தி எல்லாத் தொகுதிக ளிலும் போட்டியிட்டது. இதுபோல சீமாந்திர பகுதியில் YSR காங்கிரஸ் போட்டியிட்டது. உத்தர பிர தேசத்தில் பகுஜன் சமாஜக்கட்சி 80 தொகுதிகளி லும் போட்டியிட்டது. இத் தேர்தலில் தேசிய ரீதியான வாக்குப்பதிவு 66.4 வீதமாக இருந்தது.

தேசிய ரீதியில் அமைக்கப்பட்ட இரண்டு அணிகளுக்குவெளியில்பலகட்சிகள் சுயேட்சைகள் போட்டியிட்டன.

543 தேர்தல் முடிவுகளின் பருமட்டான பண்பு பின்வருமாறு:

தேசிய ஜனநாயக முன்னணி 336 +195
ஐக்கிய முற்போக்கு முன்னணி 59 -175
ஏனையவை 148 -20

தேசிய ஜனநாயக முன்னணி 15ஆவது லோக் சபையில் கொண்டிருந்த பிரதிநிதிகளிலும் பார்க்க 195 கூடுதலாகப் பெற்றுள்ளது. ஐக்கிய முற்போக்கு முன்னணி 175 பிரதிகளை இழந்துள்ளது.

**2014 இல் தேசிய ஜனநாயக முன்னணியிலும் ஐக்கிய முற்போக்கு முன்னணியிலும் பங்கு கொண்ட கட்சிகள் பெற்ற ஆசனங்கள் எண்ணிக்கையும் 2009 இல் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கைக் கிடையிலான வேறுபாடும் பின்வருமாறு:**

| கட்சி | எண்ணிக்கை | வேறுபாடு |
|---|---|---|
| பாரதிய ஜனநாயகக் கட்சி | 282 | +166. |
| சிவசேன | 18 | +07. |
| தெலுங்குதேசம் | 16 | +10. |
| லோக் ஜனசா கட்சி | 6 | +6. |
| சிரோமனி அக்காலிதான் | 4 | .0. |
| ராஷ்டிரிய லோக் சம்தா கட்சி | 3 | +3. |
| அப்னா தாள் | 2 | +2. |
| நாசலாந்து மக்கள் முன்னணி | 1 | -0. |
| சுவாபிமானிக் கட்சி | 1 | -0. |
| இந்திய தேசியNR காங்கிரஸ் | 1 | +1. |
| நாகமக்கள் கட்சி | 1 | +1. |
| பாட்டாளர் மக்கள் கட்சி | 1 | +1. |
| ஜனநாயக முற்போக்கு முன்னணி | | |
| காங்கிரஸ் | 44 | -162. |
| தேசிய காங்கிரஸ் | 3 | -3. |
| ராஷ்டிரிய ஜனதாள் | 4 | -0. |
| இந்திய முஸ்லிம்லீக் | 2 | -0. |
| ஜார்கண்ட் முத்தி மோச்சா | 2 | -0. |
| கேரளா காங்கிரஸ் | 1 | -0. |
| ராஷ்டிரிய லோக்தாள் | 0 | -5. |
| ஜம்மு காஷ்மீர் தேசிய கொன்பிறன்ஸ் | 0 | -3. |

## ஏனைய கட்சிகள் பெற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை

| கட்சி | எண்ணிக்கை | வேறுபாடு |
|---|---|---|
| அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் | 37 | +28 |
| திரிணாமூல் காங்கிரஸ் | 34 | +15 |
| பியூ ஜனதா தாள் | 20 | +06 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 09 | -07 |
| YSR காங்கிரஸ் | 09 | +09 |
| சமாஜ்வாடி கட்சி | 05 | -18 |
| ஆத ஆமாதிக கட்சி | 04 | +04 |
| அகில இலங்கை ஐக்கிய ஜனநாயக்கட்சி | 03 | +02 |
| மக்கள் அபிவிருத்தி கட்சி | 03 | +03 |

தேர்தல் முடிவுகளை நோக்கின் பாரதீய ஜன தாக் கட்சி தேசிய ரீதியில் 31% விகித வாக்கு களைப் பெற்று 282 அங்கத்தவர்களைப் பெற்றுள்ளது. இது மக்கள் சபை அங்கத்தவர்களில் 51.9 வீதமாகும். பெற்றவாக்குகள் 171637 684 ஆகும்.

இரண்டாவதாக இந்திய தேசிய காங்கிரஸ் 19.3% வாக்குகளைப்பெற்று (1069351) 44 அங்கத்தவர்களைப் பெற்றுள்ளது. மூன்றாவதாக அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் 3.3% வாக்குகளைப் பெற்று (18115825) 37 அங்கத்தவர்களை தமிழ் நாட்டில் மாத்திரம் பெற்றுள்ளது.

நான்காவதாக திரிணாமூல் காங்கிரஸ் 3.8% வாக்குகளைப் பெற்று 34அங்கத்தவர்களை மேற்குவங்காளத்தில் பெற்றுள்ளது. ஐந்தாவதாக வியூஜனதான்1.7%வாக்குக ளைப்பெற்று (949149) 20 அங்கத்தவர்களை ஒடிசாவில் பெற்றுள்ளது.

ஆறாவதாக சிவசேன 1.9% வாக்குகளைப் பெற்று 18 அங்கத்தவர்களை மகாராஷ்டிராவில் பெற்றுள்ளது.

ஏழாவதாக தெலுங்குதேசம் 2.5% வாக்குகளைப் பெற்று (14094545) 16 அங்கத்தவர்களை சீமாந்திராவில் பெற்றுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாக்சிஸ்ற்) 3.2% வாக்குளைப் பெற்று (17986773) இருந்த பொழுது 9 அங்கத்தவர்களை திரிபுரா (2) கேரளா (5) மேற்கு வங்காளத்தில் (2) பெற்றுள்ளது.

YSR காங்கிரஸ் 2.5% வாக்குகளைப் பெற்று (13991280) 9 அங்கத்தவர்களை சீமந்திராவில் பெற்றுக்கொண்டது.

ஆத் ஆத்மிக் கட்சி 2.0% தேசிய காங்கிரஸ் 1.6% தெலுங்கானா காங்கிரஸ் சமித்தி கட்சி 1.7% வாக்குகளைப் பெற்றுள்ளன. சுயேச்சைகள் 3% வாக்குகளை (16743719) பெற்று 3 அங்கத்தவர்களைப் பெற்றுள்ளன.

திராவிட முன்னேற்றக்கழகம் 1.7% வாக்குகள் (9636430),பகுஜன் சமாஜக்கட்சி 1.7% (9491487), ராஷ்டிரிய ஜனதாதள் 1.3% வாக்குகள் (7442 313) பெற்றிருந்த பொழுதும் ஒரு அங்கத்தவரைக் கூட பெறமுடியாது போயுள்ளது.

தேர்தல் முடிவுகளின் இடம்சார் பரம்பலை நோக்குமிடத்து சில ஒழுங்குகளைக் காணலாம். தேசிய ஜனநாயக முன்னணி இந்தி மொழி/ பண்பாடு நிலவும் உத்தரப்பிரதேசம், பீஹார், பஞ்சாப், சட்டிஸ்கார், மத் திய பிரதேசம், ராஜஸ் தான், மகாராஷ்டிரா, குஜராத், ஜம்முகாஷ்மீர் ஆகிய மாநிலங்களில் 288 ஆச னங்களை பெற்றுள்ளது. கர்நாடகாவிலும் 17 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய முற்போக்கு முன்னணி கேரளாவில் ஒரு அங்கத்துவத்தையும் பெறவில்லை. தமிழ்நாட்டில் இரண்டு அங்கத்தவர்களையும் சீமந்திராவில் இரு அங்கத்தவர்களையும் ஒடிசாவில் ஒரு அங்கத்த வரையும் மேற்கு வங்காளத்தில் இருவரையும் பெற் றுள்ளது. தேர்தல் முடிவுகளின் இடம்சார் பண்பை நோக்கின் தெற்கு,கிழக்கு பிரதேசத்தில் தேசிய ஜன நாயக முன்னணி முக்கிய இடத்தைப் பெறவில்லை.

ஐக்கிய முற்போக்கு முன்னணி கேரளாவில் சிறப்பாக வென்றுள்ளது மற்றும் கர்நாடகாவில் 9 இடங்களையும் வடகிழக்கு மாநிலங்களில் குறிப் பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளனர். இந்தி மாநிலங் களில் முக்கிய தலைவர்கள் சில தொகுதிகளில் வென்றுள்ளார்கள்.

தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ஒடிசா, தெலுங்கானா மற்றும் சீமந்திர மாநிலங்களில் பிராந்திய கட்சிகள் மிகச்சிறப்பாக ஆதரவைப் பெற்று மிகக்கூடிய அங்கத்தவர்களைப் பெற்றுள்ளன.

இத்தேர்தலில் தேசிய ஜனநாயக முன்னணியின் வெற்றிக்கு பங்களித்த காரணிகள் யாவை? தேசிய முன்னணியின் பிரதம வேட்பாளர் திரு. நரேந்திரமோடி ஒரு வினைத்திறன் மிக்க செயல் வீரர். இதை குஜராத்தில் செய்து காட்டியுள்ளார். குஜராத்தை பெரும் முன்னேற்றப்பாதை முன் கொண்டு சென்றவர் என்ற பெருமை இவருக்கு இருந்தது மற்றும் கடின உழைப்பும் சிறந்தபட்டறிவும் பகுத்தறிவும் இந்தியப் பண்பாடு கொண்ட சிறந்த தலைமைத்துவமுடையவராகவும் விளங்கினார்.

அன்னா ஹசாரே மற்றும் ஆத் ஆத்மிக் கட்சியினர் ஊழலுக்கு எதிராக எடுத்த போராட்டங்கள் காங்கிரஸ் கட்சியின் மேல் மக்கள் வெறுப்படைந்தனர். மேலும் விலைவாசி அதிகரிப்பு, பணவீக்கம், வேலையின்மை, சட்ட ஒழுங்கு சீர்குலைவு, தெலுங்கானா பிரிவு போன்றன காங்கிரஸ் கட்சி யின் நிலையைத் தளர வைத்தது. ஊடகங்கள் Corporate sector பிரிவினர் பாரதீய ஜனதாகட்சி ஆட்சிக்கு வருவதை விரும்பினர்.

மேலும் காங்கிரஸ் 10 வருடத்திற்குமேல் ஆட்சியில் இருந்ததால் மக்கள் மாற்றத்தை விரும்பினர். சென்றமுறை ஆட்சியைப் பிடிக்க முடியாது 10 வருடம் எதிர்க்கட்சியில் இருந்த பா.ஜ.க எப்படியும் ஆட்சியை பிடிக்க வேண்டு மென்று கட்சி அங்கத்தவர்கள், தலைவர்கள் கடினமாக உழைத்தனர். மோடி 12 பேர் கொண்ட உயர்மட்டக்குழுவை அமைத்து வாஜ்பாய், அத்வானி, ராஜ்நாத்தில் அருண்ஜெட்லி கட்காரி போன்றவர்களின் திறமைகளை நன்கு பயன்படுத்தினார். மேலும் பா.ஜ.க. தலைவர்கள் தலைமைத்துவப் பண்பை வளர்த்துக் கொண்டதால் சிறந்த தலைவர்கள் கொண்ட கட்சியென கருதி பொறுப்பு கொடுக்கலாம் என மக்கள் தீர்மானித்தது தேர்தல் வெற்றிக்கு பெரும் பங்களித்தது.

ஐக்கிய முற்போக்கு முன்னணி நல்ல பல திட்டங்களை குறிப்பாக பின் தங்கிய வகுப்பினர் மற்றும் அடிமட்ட மக்களுக்கு செய்தபொழுது அது பற்றிய செய்திகள் மக்களிடம் சென்றடைய வில்லை. பிரதமர் மன்மோகன் சிங் காட்டிய கூடிய மௌனமும் மக்களிடம் இருந்து மிகத்தூரத்தில் இருந்ததும் பெரிய குறையாக இருந்தன. விலைவாசி அதிகரிப்பு, ஊழல், வேலையின்மை போன்ற வற்றால் மக்கள் காங்கிரஸ் ஆட்சிமேல் அதிருப்திகொண்டனர். மேலும் இம்முறை பிரதேச உணர்வு, சாதி போன்ற காரணங்களிலும் பார்க்க அபிவிருத்தி குரல் மேல் ஓங்கியது. (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டதை ஜனாதிபதி நிரூபித்துவிட்டார்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவ வெற்றி விழா நிகழ்வில் ஜனநாயகம் பற்றி பேசிய ஜனாதிபதி, வடக்கில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் இல்லையென்பதை நிரூபித்துவிட்டார். வடக்கில் நினைவுகூரல் நிகழ்விற்கு தடை விதித்தமை தவறான செயற்பாடாகுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

யுத்த வெற்றி விழா நிகழ்வில் எதிர்க்கட்சி பங்கேற்காமை மற்றும் வடக்கில் மே 18 நிகழ்வுகளுக்கு தடை விதித்தமை தொடர்பில் கூறுகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அழைப்பு விடுக்காமையினாலேயே நாம் யுத்த வெற்றி விழாவில் கலந்துகொள்ளவில்லை.

இராணுவ வெற்றி விழா நிகழ்வில் ஜனாதிபதி நாட்டின் ஜனநாயகம் பற்றியும் மக்களின் உரிமைகள் தொடர்பிலும் பேசினார். மூவின மக்களையும் ஆதரிப்பதாகக் கூறிய ஜனாதிபதி, வடக்கில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு தடை விதித்தது ஏன்? அவர்களை கட்டுப்படுத்தும் வகையில் வடக்கில் அதிகளவில் இராணுவத்தினையும் பொலிஸாரையும் குவித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டது ஏன்?

யுத்த வெற்றிக் கொண்டாட்டம் அவசியமானதாக இருந்தாலும் இழப்புக்களை சந்தித்த மக்களின் வேதனையினையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனெனில், யுத்தத்தில் இழப்புகளை அதிகளவில் சந்தித்தது வடக்கில் வாழும் அப்பாவி தமிழ் மக்களே.

அவர்களை நிம்மதியாக அஞ்சலி நிகழ்வினை மேற்கொள்ள விட்டிருந்தால் ஜனாதிபதி குறிப்பிட்ட ஜனநாயகம் அர்த்தப்பட்டிருக்கும். ஆனால், மே தின வெற்றி விழாவில் ஜனாதிபதி பேசிய வார்த்தைகள் அனைத்தையும் பொய்யென நிரூபிக்கும் வகையில் இராணுவம் வடக்கில் செயற்பட்டு ள்ளது.

சர்வதேச நாடுகள் அனைத்தும் இதனை நிச்சயமாக அவதானித்திருக்கும். இலங்கையின் உண்மை நிலைமையினையும் அனைவரும் உணர்ந்திருப்பார்கள்.

வெற்றியை தேசிய ரீதியில் அனைத்து மக்களும் கொண்டாட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்குமானால் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருக்க வேண்டும்.

ஆயினும், இவ் வெற்றியானது தனியே அரசாங்கத்தினால் மட்டும் கொண்டாடப்பட வேண்டும். யுத்த குற்றங்களை புரிந்தும் பொது மக்களை அழித்தும் பெற்ற வெற்றியில் நாம் கலந்துகொள்ளப் போவதில்லை.

அதேபோல் முக்கியமான நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொள்ளவில்லை என்பதும் சிந்திக்க வைத்துள்ளது. ஏனெனில், இவ்வாறான நிகழ்வுகளில் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்காதது தெரிந்த விடயமெனினும், சர்வதேச நாடடுத் தூதுவர்களுக்கு அரசாங்கம் அழைப்புவிடுக்காது இருந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே, அவ்வாறான நிலையில் சர்வதேச நாடுகளின் தூதுவர்கள் வராதிருந்தமை ஏன் என்பதும் சந்தேகத்திற்குரிய விடயமே எனவும் தெரிவித்தார். (2)

# முள்ளி வாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பு

(சென்னை)

5 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு, தஞ்சாவூர் விளாரிலுள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று முன்தினம் மெழுகுவர்த்தி ஏந்தி, உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உள்ள விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பெற்றோர் அஸ்திக்கு அனைவரும் மலர் தூவியும், மெழுகுவர்த்தி ஏந்தியும் அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பழ. நெடுமாறன்,

2009 ஆம் ஆண்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தை முள்ளிவாய்க்கால் நினைவு தினமாக அனுசரித்து வருகிறோம்.

இந்நாளில், இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்கு காரணமாக இருந்தவர்களை பொது விசாரணைக்கு உட்படுத்தி தண்டனை பெற்றுத்தர வேண்டும் என தமிழர்கள் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

அங்கு வாழ்ந்த இலங்கைத் தமிழர்கள் தங்களின் இடத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அவ்வாறு குடிபெயர்ந்த தமிழர்களை மீண்டும் அவர்கள் இடத்திலேயே குடியமர்த்த வேண்டும்.

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தி, அவர்கள் அளிக்கும் தீர்ப்பை உலக சமுதாயம் முடுக கிவிட வேண்டும் என்றார். (2)

# அனைத்து பரிந்துரைகளையும் நாம் அமுல்படுத்த முடியாது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை வேதாகமமாக நோக்க முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை பரிசுத்த வேதாகமமாக கருதிவிட முடியாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பரிந்துரைகளையும் அமுல்படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமுல்படுத்த முடியும் எனக் கருதும் பரிந்துரைகள் மட்டுமே அமுல்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில பரிந்துரைகளை குறுகிய காலத்தில் அமுல்படுத்த முடியும் எனவும், சிலவற்றை நீண்ட காலத்திலேயே அமுல்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துமாறு சர்வதேச சமூகம் கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார். (2)

# மாணவர்களுக்கு மூலிகை கஞ்சி வழங்கும் திட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

மாணவர்களிடையே போஷாக்கை வளர்க்கும் பொருட்டு மூலிகைக் கஞ்சி வழங்கும் திட்டமொன்றை கல்விச் சேவைகள் அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதனடிப்படையில் நாளாந்தம் மாணவர்களுக்கு ஒரு கோப்பை மூலிகைக் கஞ்சி வழங்கப்படும். இதனால் போஷாக்கு பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர் வரவை அதிகரித்தல், சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களையும் சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் உருவாக்குதல் உணவுக் கலாசாரத்தை கட்டி எழுப்புதல், மூலம் சிறந்த பிரஜையை உருவாக்கும் நோக்கில் இந்த திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

போஷாக்குப் பொறுப்பான ஆசிரியரின் கண்காணிப்பின் கீழ் பாடசாலையிலேயே மருந்து மூலிகைகளைக் கொண்ட கஞ்சி தயாரிக்கப்படும். பாரம்பரிய அரிசியும் இதற்கு பாவிக்கப்படும்.

கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தலைமையில் இன்று புதன்கிழமை காலை கல்விச் சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்த வைபவம் நடைபெறும்.

ஜனாதிபதி செயலக போஷாக்கு இணைப்பாளர் டாக்டர் லலித் சந்திரதாசவும் இதில் பங்கேற்பார். (2)

# இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் ...

தமிழ்நாடு, மேற்குவங்காளம்,ஒடிசா போன்ற மாநிலங்களில் மாநிலக் கட்சிகள் சிறப்பாக செய்த தற்கு முக்கிய காரணம் மத்தியில் ஒரு கட்சியும் பெரும்பான்மை எடுக்காது என்ற நிலையில் மூன்றாவது அணியமைத்து அதிகாரத்தை பெறமுடியும் அல்லது இரண்டிலொரு அணியுடன் பேரம்பேசி மாநில நலன்களைப் பெறவும் முக்கிய பதவிகளையும் பெறமுடியுமென முதல மைச்சர்கள் பிரசாரம் செய்தனர்.

செல்வி. ஜெயலலிதா,செல்வி மம்தா பாணர்ஜி, பியூ. பட்நாயக், முலாயம் சிங் யாதவ், செல்வி. மாயாவதி பிரசாரம் செய்தனர். இடதுசாரி கட்சிகள் மதச் சார்பற்ற கட்சிகளை இணைத்து தேர்தலின் பின் மூன்றாவது அணியை உருவாக்கலாம் என்ற கருத்தை முன்னெடுத்தனர். இவர்களில் முலாயம் சிங்கினதும் செல்வி மாயாவதி பிரசாரமும் எடுபடவில்லை. இவர்கள் இருவரும் உத்திரப் பிரதேசத்தில் படுதோல்வியடைந்தனர்.

"தேர்தல் முடிந்து பிரதமராக நரேந்திர மோடி பதவி யேற்கவுள்ளார். இந்நிலையில் அமைச்சரவை அமைப்பது இந்தியாவில் பெரிய கடினமான வேலையாகும். கட்சியின் முக்கிய தலைவர்கள் நிதி, பாதுகாப்பு, உள்நாட்டு விவகாரம், வெளிநாட்டுவிவ காரம் போன்ற முக்கிய பதவிகளைப்பெற முனைவர்- இந்திய அமைச்சர் குழு மூன்று வகையான அமைச்சர்களைக் கொண்டது. கபினட் அந்தஸ்து அமைச்சர், கபினட் அந்தஸ்து இல்லாத தனி-அமைச்சர், பிரதி/உதவி அமைச்சர்கள்தேசிய ஜனநாயக முன்னணியில் 336, 282 பாரதீய ஜனதாகட்சி யும் 54 பேர் கூட் டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். அமைச்சர் பதவிகளைப் பகிரும் போது கட்சிகளின் நலன், பிராந்தியங்களின் நலன் போன்றவற்றை பேண வேண்டியிருக்கும்.

பிரதமர் பதவியேற்று மத்திய அமைச்சர் சபை உருவாக்கப்பட்டு மக்கள் மோடியிடம் எதிர்பார்க் கும்பல எதிர்பார்ப்புக்களை அவர்கள்கூறிய முறைப் படி குறுகிய காலத்தில் சமூக- பொருளாதாரத்தை முன்னெடுத்து இந்திய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு உலகில் மிகப்பெரியநாடுகளில் இந்தியா ஒன்றாக இருப்பதால் உலக சமாதானத் திற்கும் நல்வாழ்வுக்காக ஏங்கி நிற்கும் வறிய, ஒடுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட மக்களுக்கு உதவுவது பெரிய நாட்டின் கடமையாகும்.

# பிரிவுத்துயர் பகிர்வு



### சத்தியானந்தம் பதூஷன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு உண்டியலடியை பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியானந்தம் பதூஷன் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.



### திருமதி கேதாரகுமார் தமிழினி

A.P.C வீதி, துணுக்காயை வசிப்பிடமாகக் கொண்ட கேதாரகுமார் தமிழினி (முன்பள்ளி ஆசிரியர், துணுக்காய்) கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.



### செல்வரத்தினம் வசீகரன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Krefeldஜ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் வசீகரன் கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு Ander Elfrather Muhle 115 47802 Krefeld, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி நடராஜா பரமேஸ்வரி

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பரமேஸ்வரி கடந்த 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தில்லைநாதன் தனலெட்சுமி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நாவலப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட தில்லைநாதன் தனலெட்சுமி கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இணுவிலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி அரசரத்தினம் சரோஜினிதேவி

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அரசரத்தினம் சரோஜினி தேவி கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு Crematorium Joncherolles 95, rue Marcel Sembat 93430 Villetaneuse, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்தி விடும்.

~ லத்தீன் பழமொழி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## மோடி நல்லவரா என்பது தெரியாது சோனியாவை விட மோசமானவர் அல்ல

இந்திய தேசத்தின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ளார். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றிருந்தது.

இந் நிலையில் எவருடைய ஆதரவும் இல்லாமல் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியமைக்கும் நிலையில் நரேந்திர மோடி பிரதமரானால் எங்களுக்கு ஏதாவது நல்லது நடக்குமா? என்பதே இன்றைய வாதம்.

தேர்தல் பிரசாரத்தின் போது சொல்வதும் ஆட்சிப்பீடம் ஏறினால் அதை மறப்பதும் அரசியலில் சகஜம். அந்தவகையில் பிரதமர் மோடியும் தனது பிரசாரத்தின்போது ஈழத்தமிழர்கள் குறித்துப் பேசியதை மறந்து போகலாம்.

இது தவிர, இந்தியப் புலனாய்வுத் துறையின் ஆலோசனைகள் பாதுகாப்பு மற்றும் தேசியக் கொள்கை சார்ந்த எல்லைப்பாடுகள் என்பனவும் மோடியை கட்டுப்படுத்தவே செய்யும்.

எனவே மோடி வெல்வதற்கு முன்னதாக அவரிடம் எதிர்பார்த்ததை அப்படியே செய்வார் என்று இப்போது நாம் எதிர்பார்க்க முடியாது.

அப்படியானால் மோடியிருந்தால் என்ன? இத்தாலிய நாட்டின் லேடி இருந்தால் என்ன? என்று நீங்கள் கேட்பதும் நம் செவிகளில் விழுவே செய்கிறது.

இங்குதான் ஓர் உண்மையை உணரவேண்டிய தேவையுள்ளது. அதாவது நாங்கள் எதிர்பார்த்ததை பிரதமர் நரேந்திர மோடி செய்யாவிடினும் சோனியா காந்தி போல எங்களுக்குத் துரோகத்தனம் இழைக்க மாட்டார் என்பது இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

வன்னியுத்தம் நடந்தபோது, தமிழ் மக்களை காப்பாற்றுவது போல ஆளும் காங்கிரஸ் நடித்தது. அவர்களின் நடிப்பிற்கு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தாளம் போட்டார். முடிபில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வன்னிப்போரில் மாண்டு போயினர்.

அதன் பின்னர் கூட, சோனியா காந்தியோ, மன்மோகன் சிங்கோ எங்கள் மீது இரக்கம் கொள்ளவில்லை. தமிழ் மக்களை அழிப்பது விடுதலைப் புலிகளை அழிப்பதாகும் என்பதே சோனியாவின் முடிவாகும்.

இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்று நாங்கள் நம்பியிருக்க அந்த நம்பிக்கை நடக்கும் என்பது போல, இடையிடையே இந்தியப்பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களை இலங்கைக்கு அனுப்பி அரசுடன் பேச்சு நடத்துவது போலக் காட்டாப்புக்காட்டி எங்களை கந்தறுத்த சோனியா காந்தி செய்த துரோகம் ஒரு போதும் மறப்பதற்குரியதல்ல.

இறுதிவரை ஈழத்தமிழ் மக்களின் மீட்பர்கள் போல தங்களைக்காட்டிக்கொண்ட இந்தியக் காங்கிரஸ் தலைமை, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவந்த தீர்மானத்தில் வாக்களிக்காததன் மூலம் தன் சுயரூபத்தைக் காட்டிக்கொண்டது.

சுயரூபம் வெளிப்பட; அதற்கான அழிவும் நெருங்கி வர, இந்தியவரலாற்றில் ஒரு போதும் கண்டிராத தோல்வியை சோனியா தலைமையிலான காங்கிரஸ் சந்தித்துக் கொண்டது.

போர் புரிந்து உயிர் பறித்தவர்களைவிட, அந்தப் போருக்கு உதவியவர்கள் முதலில் தண்டனை பெறுவதே நியதி. பாரதப்போரில் சகுனி, துச்சாதனன் ஆகியோரின் மரணத்திற்குப் பின்னரே துரியோதனன் கொல்லப்படுகின்றான் அல்லவா! அது போலதான் சோனியாவுக்கு நேர்ந்த அரசியல் அழிவும்.

ஆக, மோடி நமக்கு உதவாவிட்டாலும் எங்களுக்கு உபத்திரமாக இருந்த ஒரு கிரகம் கெட்டுப்போவது நல்லது. கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் யோகம் என்ற சோதிட வாக்கின் பிரகாரம், மோடியால் நமக்கு நம்மை கிடைக்கும் என நம்பலாம்.

# ஆணைக்குழு தொடர்பில் கருத்து வெளியிடும்போது த.தே. கூட்டமைப்பு அவதானமாக இருக்க வேண்டும்

## ஆணைக்குழுவின் தலைவர் பரணகம

(கொழும்பு)

காணாமற போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் மீது நம்பிக்கையில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் கவலையளிப்பதாக அந்த ஆணைக் குழுவின்தலைவர்மக்ஸ்வெல்பரணகம தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர்களின் கூட்டத்தில், காணாமற போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செயயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் மீது நம்பிக்கையில்லை, இதனை நிராகரிப்போம் என தீர்மானிக்கப்பட்டதாக அச்சு ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கூட்டமைப்பினரின் இந்தத் தீர்மானம் கவலையளிப்பதாகத் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட காணாமற் போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தற்பொழுதே தனது பணிகளை ஆரம்பித்து முன் கொண்டு செல்கிறது.

குறித்த ஆணைக்குழு மீது நமபிக்கை வைத்திருக்காவிட்டால் வடக்கு, கிழக்கிலுள்ள பெரும் எண்ணிக்கையி லான மக்கள் தமது முறைப்பாடுகளையும், சாட்சியங்களையும் ஆணைக் குழு முன்னிலையில் பதிவுசெய்திருக்க மாட்டார்கள்.

பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தாலும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் நடைபெற்ற அமர்வுகளில் குறிப்பிட்டளவு முறைப்பாட்டாளர்களிடமே சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. இது தொடர்பில் அச்சு மற்றும இலத்திரனியல் ஊடகங்கள் மூலம மக்களுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முற்படும் இந்த ஆணைக்குழு மீது, மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை யைக் குறைத்து தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆணைக் குழு தொடர்பில் சந்தேக மொன்றைத் தோற்றுவிக்கும் வகையில் இவ்வாறான தொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு விசாரணைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து, அதனை ஆராய்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இன்னமும் காலமிருக்கும் நிலையில், ஆணைக்குழு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் தீர்மானம் மற்றும் முன்வைத்திருக்கும் விமர்சனம் யதார்த்தமற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர்கள் கூடி ஆணைக்குழுவை நிராகரிப்பதாக தீர்மானம் எடுத்திருந்தாலும், ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட ஆணைக்கு அமைய காணாமற போனவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு, வெளிப்படையாக நம்பிக்கையுடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும்.

கிளிநொச்சியில் காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்கிய வைபவத்துக்கும், ஆணைக்குழுவுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி காணாமற போனவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் வைபவமானது கிளிநொச்சியிலுள்ள ஒத்துழைப்பு மையத்தினால்முன னெடுக்கப்பட்ட பிறிதொரு செயற்பாடாகும்.

இதற்கும், ஆணைக்குழுவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. காணாமற் போனவர்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதும், அவை தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்வதுமே எமது ஆணைக்குழுவின் செயற்பாடுகளாகும்.

அதேநேரம் மரணச்சான்றிதழ் தொடர்பாக எழுப்பப்படும் கேள்வி தொடர்பாக ஆணைக் குழு, பல்வேறு சர்வதேச அமைப்புக்களுடன்கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

காணாமற போனவர்களின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இல்லாமை தொடர்பான சான்றிதழ் ஒன்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அவ்வாறானதொரு சான்றிதழை வழங்குவதானது விசாரணையை ஆணைக் குழு முடித்து விட்டது எனப் பொருள்படாது. இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரை அனைத்து விசாரணைகளையும் ஆணைக் குழு வைத்திருக்கும்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விமர்சிக்காமல் காணாமற போனவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது வடமாகாண சபையின் உறுப்பினர்களோ ஆணைக்குழுவின் செயற்பாடு கள் குறித்துக் கலந்துரையாடுவதை அல்லது ஒத்துழைப்பு வழங்குவதை ஆணைக்குழு வரவேற்கும்.

ஆணைக்குழுவின் மீது நம்பிக்கையில்லை என எடுக்கப்பட்ட தீர்மானமானது பாதகமான விடயங்களைக் கொண்டு எடுக்கப்பட்டதாக இருக்கக் கூடாது, சாதகமான விடயங்களைக் கொண்டு எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அப்போதே ஆணைக்குழுவின்செயற்பாடுகளை மேலும பலப்படுத்த முடியும். விசாரணைகள் குறித்த இறுதி அறிக்கையை ஆணைக்குழு சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஆணைக்குழு தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

## சட்டம் ஒழுங்கு தொடர்பில் ஆலோசனைக்குழு உருவாக்கம்

(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு தொடர்பில் ஆலோசனைக் குழுவொன்று உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் ஒழுங்கு விவகாரங்கள் தொடர்பில ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இந்தக் குழு உருவாக்கப்படவுள்ளது.

சட்டம்ஒழுங்கு தொடர்பில்கொள்கை வகுப்பு மற்றும் திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் இந்தக்குழு ஜனாதிபதிக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக்குழு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் இயங்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மத முரண்பாடுகள், சமூகப் பிரச்சினைகள், இனப் பிரச்சினைகள் தொடர்பில் இந்தக் குழு ஆலோசனை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக்குழு சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளாது எனவும், பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மத முரண்பாடுகளை தடுக்கும் நோக்கில் ஏற்கெனவே விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கு மேலதிகமாக இந்த விசேட ஆலோசனைக் குழுவினையும் அரசாங்கம் நிறுவத்திட்டமிட்டுள்ளது. (2)

## எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளத்தயார்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு மற்றும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எதிராக எந்த அச்சுறுத்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள இராணுவம் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளும் வலிமையுடன் நாட்டின் படையினர் இருக்கின்றனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை பாதுகாக்க படையினர். அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு படைகளின் புலனாய்வுப் பிரிவுகள் பாதுகாப்பு செயலாளரின் வழிகாட்டிலின் கீழ் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதனால் புலிகளின் மீள் இணைவு முயற்சிகளை தோற்கடிக்க முடிந்தது.

இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் புனர்வாழ்வு பயிற்சிகள் என்பது முழு உலகத்திற்கும் சிறந்த உதாரணமாக திகழ்வதாகவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### வணக்கம் போடுங்க



✦ கடவுளுக்கும், அவரது திருநாமத்திற்கும் வித்தியாசமே கிடையாது.

✦ பிறருடைய குற்றத்தை மட்டுமே சிந்தித்தால் காலம் வீணாக கழிந்து விடும்.

✦ வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால், திட சிந்தனை, நம்பிக்கை வேண்டும்.

✦ பக்திமானாக இருப்பது அவசியம். ஆனால், அதற்காக மூடத்தனத்துடன் இருக்கக் கூடாது.

✦ மற்றவர் தலைவணங்கும்போது, நாமும் வணக்கம் செலுத்த வேண்டியது கடமை.


✦ தாய் தந்தையரை திருப்திப்படுத்தாவிட்டால், கடவுள் நம் பக்தியை ஏற்பதில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை தடகளப் போட்டி; சம்பியனானது முகாமைத்துவ வணிக பீடம்














யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடங்களுக்கிடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதலாம் இடத்தினைப் பெற்று சம்பியன் பட்டம் வென்றது.

யாழ். பல்கலைக்கழக 2014 ஆம் ஆண்டுக்கான பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி ஏ.புஸ்பநாதன், பீடாதிபதி வியாபாரக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம் அவர்களும் அவரது பாரியார் திருமதி விஜிதா புஸ்பநாதன், ஆசிரியர், வவுனியா, றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் அவர்களும், சிறப்பு விருந்தினராக எஸ்.மைக்கேல் ஜெயராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், மடு அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இப்போட்டிக்கு கே.கணேசநாதன், பணிப்பாளர், உடற்கல்வி அலகு, யாழ்.பல்கலைக்கழகம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார். இப் போட்டியில் அதிக வீரர்கள் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிக் கொணர்ந்திருந்தனர்.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதலாம் இடத்தையும், கலைப் பீடம் இரண்டாம் இடத்தையும், விஞ்ஞான பீடம் மூன்றாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதலாம் இடத்தையும், கலைப்பீடம் இரண்டாம் இடத்தையும் விஞ்ஞான பீடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதலாம் இடத்தையும் கலைப்பீடம் இரண்டாம் இடத்தையும் விஞ்ஞான பீடம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட வீரர்களான ஜே.ஈ.றொஸ்கின் ஜோண்ஸ், பி.சிறின் டெஸ்லின் முறையே சிறந்த தடகள வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். கலைப்பீட வீராங்கனை எஸ்.பார்த்தீபா, விவசாய பீட வீராங்கனை ரி.சயந்திகா முறையே சிறந்த தடகள வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இப் போட்டியின் சிறந்த வீரராக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட வீரர் பி.சிறின் டெஸ்லின் தெரிவு செய்யப்பட்டார். இப் போட்டியில் மூன்று புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட வீராங்கனை எஸ்.தாரணி தட்டெறிதல்; ஈட்டி எறிதல் ஆகிய இரு நிகழ்வுகளிலும், கலைப்பீட வீராங்கனை ஜி.துஸ்யந்தி உயரம் பாய்தலிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியிருந்தனர்.

(படங்கள்:- ச.சஞ்சயன்)

## சென்றலைட்ஸ் புளூஸ் வெற்றி

சென்றலைட்ஸ் புளூஸ் அணிக்கும் திருநெல்வேலி YMHA அணிக்கும் எதிரான கிரிக்கெட் போட்டியில் சென்றலைட்ஸ் புளூஸ் அணி 115 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் புளூஸ் அணி 44 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 211 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் சுபாஸ்கரன் 64 ஓட்டங்களையும் ஜெரிக் துசாந்த் 36 ஓட்டங்களையும் கிஷாந்தன் 31 ஓட்டங்களையும் வினோத்குமார் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி YMHA அணி சார்பாக நிலாயணன் 9 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ராசேந்திரன் 10 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சுபாஸ்கரன் 8 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி YMHA அணி 27.3 ஓவர்களில் 96 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 115 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சுதாகரன் 22 ஓட்டங்களையும் பந்துசன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் கிஷாந்தன் 7 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஜெரிக்துசாந்த் 8 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மதுசன் 8 ஓவர்கள் பந்துவீசி 39 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சென்றலைட்ஸ் புளூஸ் அணியின் கிஷாந்தன் தெரிவானார். (கு)



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

அண்மையில் இடம்பெற்ற வட மாகாண ரீதியான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகிய யாழ்.மாவட்ட அணியினரை படத்தில் காணலாம்.

(படம் : மானிப்பாய் செய்தியாளர்)





சங்கானை நிச்சாமம் சரஸ்வதி முன்பள்ளி 2014 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது...

## இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இன்றைய லீக் போட்டியில் உடுவில் சிந்து A அணியும் புதுமடம் வைகறை A அணியும் மோதவுள்ளன.

இப் போட்டி இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநராக கடமையாற்ற சங்கிலி மன்னனின் வாரிசு விருப்பம்

(கொழும்பு)

வட மாகாண ஆளுநராகப் பணி யாற்ற சங்கிலி மன்னனின் வாரிசான ராஜா றெமிஜியஸ் கனகராஜா விருப்பம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனின் வாரிசான ராஜா றெமிஜியஸ் கனகராஜா தற்போது நெதர்லாந்தில் வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில், வடமாகாண. ஆளுநராக தன்னை நியமித்தால், அரசியல் பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வுகாண முடியும் என்று அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் தன்மீதான தடையை நீக்கி அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்தால், தான் நாடு திரும்பி வட மாகாண மக்களுக்கு சேவையாற்றத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த மாதம் நெதர்லாந்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தித்து ராஜா றெமிஜியஸ் கனகராஜா பேசியுள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அவர், நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதரகத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தித்து, இலங்கையின் அரசியல் மற்றும் வடக்கின் நிலைமைகள் குறித்துப் பேசினேன்.

வடமாகாணத்துக்கு ஒரு இராணுவ ஆளுநர் தேவையில்லை என்றும் சிவில் ஆளுநரே தேவை என்றும், அப்பணியை நான் ஆற்றத் தயாராக இருப்பதாகவும் இதன்போது அவரிடம் கூறினேன்.

போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகி விட்ட நிலையிலும் இலங்கையின் முன்னாள் படை அதிகாரியே வடமாகாணத்தை ஆட்சி செய்கிறார்.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் இலங்கையின் மற்றொரு படைத் துறை அதிகாரியே மீண்டும் வட மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார். இது தொடரக் கூடாது. இந்தநிலை மாற்றப்பட வேண்டும்.

அரசாங்கம் அனுமதித்தால் ஒரு அமைச்சராகவோ அல்லது வட மாகாண சபைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு தூதுவராகவோ பணியாற்ற நான் தயாராக இருக்கிறேன் என அவரிடம் கூறினேன் என்று தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்தில் தற்போது வாழ்ந்து வரும் ராஜா றெமிஜியஸ் கனகராஜா இன்னமும் அரச நடைமுறைகளையே பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இரத்தக்கறையுடன் சென்று பொலிஸில் முறையிட்ட இளைஞன்

## சாவகச்சேரியில் சம்பவம்

(சாவகச்சேரி)

மதுக்கடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த நபர் ஒருவர் இரத்தக்கறையுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிட்ட சம்பவம் ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

கல்வயல் பகுதியில் நேற்று மதியம் மூன்று இளைஞர்கள் இணைந்து மது அருந்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட தகராறில் இரு வர் இணைந்து மற்றவரைத் தாக்கி போத்திலால் குத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த பிரஸ்தாப இளைஞன் இரத்தக்கறையுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் மற்றைய இருவரையும் கைது செய்தனர்.

எனினும் மூவரும் காய மடைந்து காணப்படுவதாக தெரிவித்த பொலிஸார் மூவரையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (எ-1)

# ஐ.நா.தீர்...

நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சர்வதேசக் கடமைகள் என்ன? இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் இத்தீர்மானங்கள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி பூரணமாக நிறை வேற்றப்பட முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் இக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளதுடன் பொது மக்களின் கருத்துகளும் உள்வாங்கப்படவுள்ளன. (எ-11)

# ஒன்றரைக் கோடி...

இல்லையேல் வெளிநாட்டுக்கு அனுப்புமாறும் பணத்தை கொடுத்தவர்களிடம் கேட்டுள்ளார். இந்நிலையில் பிரச்சினையை பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியவர்கள் அப்பெண்ணை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கூறியுள்ளனர்.

இதனை நம்பி அந்தப் பெண் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்றவேளை அப் பெண்ணை பின்தொடர்ந்தவர்கள் அப்பெண்ணை முச்சக்கரவண்டியொன்றில் கடத்திச் சென்று வைத்திருந்து கை கால்களைக் கட்டி மயானத்தில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அந்தப் பெண காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணும் பாதிக்கப்பட்ட மேலும் 06 பேரும இணைந்து கஸ்தூரியார் வீதியிலுள்ள இடைத்தரகர் குடும்பத்தின் வீட்டை நேற்று செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டனர்.

இது தொடர்பாக தகவலறிந்த யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொலிஸார் அவ்வீட்டிற்கு சென்று வீட்டிலிருந்த 02 பெண்களையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அத்துடன் குறித்த 07 பேரும் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மீண்டும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-6,11)

# பதவியேற்...

ஜியை சந்தித்து நாட்டின் அடுத்த பிரதமராக வருவதற்கு முறைப்படி உரிமை கோரியிருந்தார்.

ஆட்சி அமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையை பாரதிய ஜனதா கட்சி தனித்தே பெறுவதாக சென்ற வாரம் வெளியான தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன.

ஒரு கட்சி தனித்து ஆட்சி அமைககும் அளவுக்கு ஆசனங்களை வெல்வதென்பது இந்தியாவில் கடந்த முப்பது ஆண்டுகளில் இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# குற்றத்தடு...

என உத்தரவிட்டுள்ளனர்.

இதனால் தான் கொழும்பிற்கு பயணிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இன்றையதினம் யாழ்.பல்கலையில் அனுஷடிக்கப்படவிருந்த முள்ளிவாய்க்கால் தினத்தினை குழப்பும் முகமாகவே அவர் ரி.ஐ.டியினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# இலங்கைக்கு ஆதர...

வோம் என ஜனாதிபதி ஹுசைன் தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள ஆசியாவின் தொடர்பாடல் மற்றும் நம்பிக்கையைக்கட்டியெழுப்பும்நடவடிக்கைகள் தொடர்பான நான்காவது உச்சி மாநாட்டை ஒட்டியதாகவே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுக் காலை சீனா சென்றடைந்த ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த மாநாட்டில் உரையாற்றவுள்ளார்.

சர்வதேச தளத்தில் பாகிஸ்தான் எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் என்று தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஹுசைன் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் தர்க்கரீதியற்றவை என்றும் மேலும் விளக்கினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உட்பட போரின்போதும் போருக்குப் பின்னரும் இலங்கைக்கு ஆதரவாக இருந்துவரும் பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

போருக்குப் பிந்திய அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கைகள் குறித்து விளக்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாங்கள் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவித்து அவர்களை சமூக மயப்படுத்தியுள்ளோம்.

அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு சிறந்த இடம் சமூகமே என நான் உணர்கிறேன். 595 சிறுவர் போராளிகளை விடுவித்து போர் நிறைவுபெற்று ஒரு மாதகாலப் பகுதிக்குள் அவர்களது பெற்றோரிடம் கையளித்தோம். உண்மையில் இதுவொரு கடினமான பணி எனவும் 'தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி, இது உண்மையிலேயே ஒரு பாரிய நடவடிக்கை. இது உங்களுடைய மக்களுக்கும் உங்களுடைய அரசாங்கத்திற்குமான ஒரு நீண்ட போராட்டம்.

என்ன கொள்கைகளை நீங்கள் கடைப்பிடித்தாலும் அவை வெற்றியளித்திருப்பது சான்றாகும் எனத் தெரிவித்தார். (எ-11)

# கொல்கத்தா வெற்றி



சென்னைக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதனை அடுத்து களமிறங்கிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்கள் எடுத்தது.

சென்னை அணியில் அதிகபட்சமாக ரெய்னா 52 பந்துகளில் 3 பவுண்டரி, 5 சிக்சருடன், 65 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனை அடுத்து 155 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 18 ஓவர்களில் 2 விக்கெடடை மட்டும் இழந்து 156 ஓட்டங்களை எடுத்து எளிதாக வென்றது.

கொல்கத்தா அணியில் ரொபின் உத்தப்பா 39 பந்துகளில் 10 பவுண்டரி, ஒரு சிக்சர் உள்பட 67 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் அதிரடியாக ஆடிய ஷகிப் அல் ஹசன் 21 பந்துகளில் 46 ஓட்டங்களை எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணியின் உத்தப்பா தெரிவானார். (க)

# வெள்ளைக் கொடி விவகாரம் புதிய ஆதாரம் கிடைத்தது

(கொழும்பு)

வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பில் புதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மனித உரிமை சட்டத்தரணியும, ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் உறுப்பினருமான யாஸ்மீன் சூகா தெரிவித்துள்ளார்.

இந்த புதிய ஆதாரங்கள் சர்வதேச சுயாதீன விசாரணைகளின் இன்றியமையா தன்மையை மேலும் வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் என்ற அமைப்பினால் வெள்ளைக் கொடிச் சம்பவம் பற்றிய புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுளளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக, சிவிலியன் மற்றும் பொலிஸ் முக்கிய தலைவர்கள் சரணடைந்த போது கொலை செய்யப்பட்டதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமையானது பாரியளவிலான சர்வதேச மனிதாபிமான சட்ட மீறலாகும் என சூகா குற்றம் சுமத்தியுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் என்ற அமைப்பு புதிய அறிக்கை வெளியிட்டுள்ளது.

அப்போதைய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹணவினால் புலிகளுக்கு ஐரோப்பிய மத்தியஸ்தர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட குறுஞ்செய்திகள் உளளிட்ட முக்கிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறு சரணடைவது என்பது பற்றி கொஹன வழங்கிய அறிவுறுத்தல்கள் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்தி ஆதாரமாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேரில் கண்ட சாட்சியங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெள்ளைக் கொடி சம்பவம் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# 'இவ்வுலகிலிருந்து...

கத்தினூடாக வளர்ப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.

இவ்வாறு முயற்சி செய்யும் தேச விரோத சக்திகளை நாம் இனங்கண்டு உள்ளோம். இவர்களில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பேராசிரியர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள் ஆகியோர் இனங்காணப்பட்டுள்ளதோடு இவர்களோடு சேர்ந்து ஒரு சில பேப்பர்காரர்களும் செயற்பட்டுவருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளது.

இவர்களிற்கு பலமுறை எச்சரிக்கை கூறியிருந்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை. தொடர்ந்தும் மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் சேர்ந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது இவர்களிற்கான இறுதி எச்சரிக்கையாகும். பீடாதிபதி சிவநாதன், ஆசிரிய சங்க தலைவர் ராசகுமாரன், மாணவர் ஒன்றிய தலைவர் கிருபா, கோமேஸ், பேப்பர்காரர்களான சாளின், நிரோஜன் ஆகியோர் உட்பட இனங்காணப்பட்டுள்ளனர்.

'இவர்கள் இனியும் திருந்தா விட்டால் இறுதி தீர்ப்பு மரண தண்டனையே. சிலருக்கு இறுதி நாளும் குறிக்கப்பட்டு விட்டது.

கடந்த எச்சரிக்கைகளை போல இதனையும் சாதாரணமாக கருதி விட வேண்டாம். உங்களுக்கு இவ்வுலகில் இருந்து விடுதலை நிச்சயம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியில் அக்கடிதத்தில் தேசம் காக்கும் படை எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வாறான அச்சங்களுக்கு எதிராக ஏற்கெனவே பல்கலை விரிவுரையாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்த நிலையில் இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வலம்புரி மற்றும் [illegible] யன் நாளிதழின் ஊடகவியலா[illegible] களின் பெயர்களும் குறிப்பிடப்[illegible] உள்ளன.

இத்துண்டுப்பிரசுரத்தினால் [illegible] கலையில் நேற்றும் பதற்றம் [illegible] யது. ([illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தற்போது அமோகமான விற்பனையில்

ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கென் விசா
வெறும் 14 இலட்சங்களுடன்

100 % சட்ட ரீதியான பயண ஆலோசனை

இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ்....
போன்ற நாடுகளுக்கான
விசா வெறும் 14 இலட்சங்களுடன்

இன்னும் 7 பேருக்கே அரியவாய்ப்பு!
7 நாள்களும் திறந்திருப்போம் (சி-7430)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



அரிய வாய்ப்பு
கனடா 10 வாரங்களில்
3 படிமுறைகளில் விசா ஆலோசனை
4 பேருக்கு மட்டும்

கனடாவில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை
முதல் 30 நாட்களுக்குள்- விண்ணப்பம் சமர்ப்பித்தலும், Skype நேர்முகத்தேர்வும்
அடுத்த 30 நாட்களுக்குள் - சட்ட அனுமதிப் பத்திரம்.
மீதி 12 தினங்களுள் - விசா பற்றிய முடிந்த முடிவு
விண்ணப்ப முடிவு - 22.05.2014 (சி-7430)

திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175.பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090



NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

இலவச கணினி வகுப்புகள் புதிய பிரிவுகள்
ஆரம்பமாகவுள்ளன (யாழ் மற்றும் கிளிநொச்சி நகரில்)

Diploma in Microsoft Office, Diploma in Graphic Designing, Diploma in Web Designing, Diploma in Video Production, Certificate in Internet & E-Mail, Certificate in Programming,
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள் அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. (Condition Apply) (சி-7429)

பரீட்சை முடிவின் பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
ஒரு பிரிவில் 10மாணவர்களே அனுமதிக்கப்படுவர் பதிவுகளுக்கு முந்துங்கள்

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275
Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

வெறும் 3 ½ இலட்சத்துடன்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு & விசாவுடன்
ஹொட்டேல் பயிற்சி (3 மாதத்தில் பயணம்)



உங்கள் தெரிவுக்கு 7 நாடுகள்
சிங்கப்பூர் / மலேசியா / டுபாய்
4*/5* ஹொட்டேல் வேலைவாய்ப்பு
மற்றும்
UK/ Australia/ Switzerland/ New Zealand Student Visa with Work Permit

100% எழுத்து மூலம் உத்தரவாதமான
Job Contract, Visa, Work Permit ஒழுங்குகள்

விளக்கக் கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்
24-05-2015 சனி காலை 10மணி
(முற்கூட்டிய அனுமதி பெறப்படவேண்டும்) (சி-7431)

FREE OFFER அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால
ENGLISH THE EASYWAY
ஆங்கிலக் கற்கைநெறி இலவசம்

வெளிநாடு செல்ல விரும்பாதவர்களுக்கு
உள்நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும்

Get Set @ Sikaram & Take Off
தொழில் திறன்களை வளர்த்து கனவுகளுக்கு சிறகுகளை கட்டுங்கள்

மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk
077 36 16 798

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்


# பாராட்டி வாழ்த்துகின்றோம்
## GERMAN LANGUAGE ACADEMY




**கோணேஸ்வரனின்** புகழ்பெற்ற ஜேர்மன் கல்லூரியில் கடந்த 02.04.2014 அன்று நடந்த A1 பரீட்சையில் எமது நிறுவனத்தினூடாக தோற்றி பெருந்தொகையான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அவர்களை GERMAN LANGUAGE ACADEMY பாராட்டி வாழ்த்துகின்றது. எமது கல்லூரி மாணவர்கள் முதற்தடவையிலே சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கது. பணத்தையும், நேரத்தையும் வீண் விரயம் செய்யாமல் சரியான தெரிவின் மூலம் எமது நிறுவனத்தினூடாக உங்கள் இலக்கை அடைந்து கொள்ளலாம்.

எமது தமிழ் மாணவர்களுக்கு எமது நிறுவனத்தில் வேறு எங்கும் இல்லாதவாறு குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வி...

முக்கிய அறிவிப்பு:

பரீட்சையில்தோற்றிய அத்தனைமாணவர்களிலும்எத்தனைமாணவர்கள் சித்தியடைந்தவர்கள் என்பதுதான் முக்கியமான விடயம்.

எமது நிறுவனத்தினூடாக 90% மாணவர்கள் முதற் தடவையிலேயே சித்தியடைவது குறிப்பிடத்தக்கது.

போலியான விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

ஆசிரியர்:S. கோணேஸ்வரன்
தொடர்புகளுக்கு:-0779707322

GERMAN LANGUAGE ACADEMY
Palaly Road, Jaffna (6415)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

# மரண அறிவித்தல்
## திருமதி சிவமலர் அரியரத்தினம்



குரும்பசிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் அரியரத்தினம் நேற்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் குரும்பசிட்டி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரை ஞானவல்வி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் அரியரத்தினத்தின் (ஓய்வுபெற்ற கணக்காளர் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் திலீபன் (U.K) Dr.நிருபா (குழந்தை வைத்திய நிபுணர்-போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிவேதிதா (U.K), Dr.கந்தசாமி உமாசங்கர் (சத்திரசிகிச்சை நிபுணர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், மிருணாளினி, பிருந்தன், லஷ்மி (U.K), அபிஷா, அபினாஷ் ஆகியோரின் அன்பு பாட்டியும், சிவகுமார், சிவனேஸ்வரி (நீர்கொழும்பு), சிவநாதன் (ஜேர்மனி), சிவராசா (சுவீடன்), சிவமணி (தலவாக்கல) ஆகியோரின் சகோதரியும் இராஜேஸ்வரி, செல்வரத்தினம் (நீர்கொழும்பு), யசோதா (ஜேர்மனி), லீலா (சுவீடன்), பஞ்சானந்தன் (தலவாக்கல) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: Dr.க.உமாசங்கர்
37/3 சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

0212221798 (6433)

## வாள்...

யில் விடுதலையாகியுள்ள அக்குழுவை சேர்ந்தவர்களே தம்மீது தாக்குலை மேற்கொண்டதாகவும் அக்குழுவை சேர்ந்தவர்களும் தற்போது பிணையில் விடுதலையான இருவரின் பெயரையும் பூநாறிமரத்தடியில் வெட்டிற்கு இலக்கான செந்தீசன் தெரிவித்தார்.

தம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் ஆவா குழுவே எனவும் அவர் பொலிஸாரிடம் வாய் மூல முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (எ-11)

## நினைவேந்தலை...

இருக்கிறது. ஆனால் இவ்வாறான நிகழ்வுகளை சிலர் தவறாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். தேவையற்ற தலையீடுகளும் ஏற்படுகின்றன.

எனவே அவற்றைத் தவிர்க்கும் வகையிலேயே இவ்வாறான நிகழ்வுகளை நடத்த வேண்டாம் என்று கேட்கிறோம் என்றார்.

அவ்வாறு ஏதாவது நிகழ்ந்தால் இராணுவத்தினர் தலையிடுவதும் தவிர்க்க முடியாதது என்றும் இராணுவத்தளபதி தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## வடக்கு மாகாண...

அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வீதியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆனாலும் அந்த சுடரையும் பொலிஸார் சப்பாத்துக்கால்களினால் எட்டி உதைத்து அநாகரிகமாக நடந்துகொண்டனர்.

இந்நிலையில் இங்கு அஞ்சலியுரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், மாகாண சபையின் அடுத்த அமர்வின் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படும். முடிந்தால் தடுத்துப்பாருங்கள் என்றும் மாகாணசபை அமர்வினை ஒத்திவைத்து முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர வேண்டும் என்றும் கூறியிருந்தார். இதற்கமைவாக நாளை நடைபெறவுள்ள மாகாண சபையின் அடுத்த அமர்வின் போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (செ-6)

உடனடி வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி Innovage புதிய காலடியை வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கால்பதிக்க உள்ளது. அதற்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.



50 பேருக்கு மட்டும் முன்னுரிமை
இன்றே உடன் அழைக்க:- (6432)
0770056677,0778920777

CHARTERED @ K-AIMS
CAB I & CAB II
Classes are on progress
0773722104
147, 2/3, K.K.S. Road [Top of DFCC Bank]
Jaffna
(C-7402) (சி-7412)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 805 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர்..
ஆரியகுளம் மற்றும் Nelliady இல் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறுகிறது......

| | | |
|---|---|---|
| ஆரம்பம்:28.05 Wed 8.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 28.04 Wed 4pm. No.181, 1st Floor, Main Street, Nelliady. | Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456 |

Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617972
Civil Mech.
Auto CAD
2D Drawing and 3D Modeling

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.